# நீச்சல் வீரர் நவரத்தினசாமி அலைகடலில் சிக்கி மாண்டார்


Registered as a News paper in Ceylon விலை சதம் 15 ★

ஈழநாடு சந்தா

வாரமதிப்பு மாத்திரம்
மூன்று மாதம் — ரூ. 4-00
ஆறு மாதம் — ரூ. 7-50
ஒரு வருடம் — ரூ. 14-00
முற்பணம் கட்ட வேண்டும்
தபால் அல்லது ஆள்மூலம் அனுப்பப்படும்.

ஈழநாடு

EELANADU

தபால்பெட்டி எண்: 49
போன்: 389
National Tamil Daily
மலர் 11
இதழ்:140
தேசிய தினசரி

ஈழநாடு சந்தா

தினப் பதிப்பு
மூன்று மாதம் — ரூ. 18-00
ஆறு மாதம் — ரூ. 34-00
ஒரு வருடம் — ரூ. 66-00

யாழ்ப்பாணம் ஆனி 18 ரபி. ஆகி 16 புதன்கிழமை [2-7-69]


## படகில் சென்றவருக்கு நேர்ந்த கதி

— நமது வல்வெட்டித்துறை நிருபர் வி.பழனிப்பிள்ளை —

வல்வெட்டித்துறை, செவ்.

**பாக்குநீரிணையை நீந்திக் கடந்து உலகசாதனையை முதல் முதலாக நிலைநாட்டிய தொண்டமனாற்றைச் சேர்ந்த நீச்சல்வீரர் எம் நவரத்தினசமி அலைகடலில் சிக்கி மாண்டார்.**

**படகில் உல்லாசமாக சென்று கொண்டிருந்தபோதே கடலில் இவர் தவறி விழுந்து அகால மரணத்துக்குள்ளானுர்.**

நேற்றைய தினம் மாலை மூன்று மணியளவில் படகொன்றில் தனியாக தொண்டமானுறு உப்புமால் கடற்கரையிலிருந்து நீச்சல் வீரர் புறப்பட்டாராம். வழக்கமாக இவர் பொழுதைக் கழிப்பதற்காக படகில் இப்படியாகச் செல்வது வழக்கமாம். படகில் சென்று குளித்துவிட்டு சில மணிநேரத்தின் பின் திரும்புவாராம். ஆனல் அவர் இப்படியாக நேற்று புறப்பட்டு பலமணிநேரமாகியும் திரும்பவில்லையாம். வீட்டுக்காரர்களும் உறவினர்களும் நீண்டநேரமாக இவர் வராதது கண்டு படகுகளில் கடலில் தேடுதல் முயற்சியில் ஈடுபட்டார்கள்.

நள்ளிரவில் அவர் சென்ற படகை மட்டும் கண்டுபிடித்தார்கள். இதனைத் தொடர்ந்து அவர் தவறி விழுந்திருக்கலாமென்ற சந்தேகம் எழும்பியது. இரவிரவாகத் தேடியும் கண்டுபிடிக்க முடியவில்லை. இன்று நண்பகல் 11-30 மணியளவில் தொண்டமானுறு கடற்கரையிலிருந்து அரைமைலுக்கு குறைவான தூரத்தில் நீச்சல்வீரரின் சடலம் அலைகளுக்கிடையே மிதந்து கொண்டிருந்தது. சடலத்தை மீட்டு கரைக்குக் கொண்டுவந்தார்கள்.

பருத்தித்துறை பகுதி மரணவிசாரணை அதிகாரி மரணவிசாரணை நடாத்தினுர் விபத்தினுல் ஏற்பட்ட மரணமெனத் தீர்ப்பளிக்கப்பட்டது.

### கதறி அழுதனர்

சடலம் கரைக்குக் கொண்டு வரப்பட்டபோது ஐயோ ஐயோ, என்ற கதறல் ஒலியும் விம்மலும் நெஞ்சை நெகிழ வைப்பதாக இருந்தது. கடற்கரையில் நூற்றுக் கணக்கானவர்கள் திரண்டிருந்தது சோகமயத்துடன் காட்சியளித்தனர். வல்வெட்டித்துறை தொண்டமானுறு பகுதிகள் சோக மயமாகக் காட்சியளித்தது கறுப்புக் கொடிகள் ஆங்காங்கே பறந்து கொண்டிருந்தன.

வல்வெட்டித்துறை கடற்கரையிலிருந்து சுமார் 82 மைல் தூரமுள்ள கோடிக்கரையை (பாக்கு நீரிணையை) நீந்திக் கடந்து உலக சாதனையை நாட்டினுர் எலிசெபெத் மகாராணியார் இலங்கைக்கு வந்திருந்த சமயம், இவருக்குக் கைகொடுத்துக் கௌரவித்தார்.

### விமான விபத்தில் 4 பேர் பலி

ஆக்ரா, ஜுலை 1

ஆக்ராவுக்குச் சிறிது தூரத்தில் இந்திய விமானப் படை விமானமொன்று நேற்று மாலை விபத்துக்குள்ளானதில் ஐந்து அதிகாரிகள் உட்பட 14 பேர் மாண்டனர்

# 'மகாத்மா போராட்டத்துக்கு வழிவகுத்தவர் நாவலர்

## 6 இடங்களில் சிலை அமைப்பது அவசியம்'

### உதவி அரசாங்க அதிபர் தலைமையுரை

யாழ்ப்பாணம், புதன்

மகாத்மாகாந்தியின் இந்திய சுதந்திரப்போராட்டத்திற்கு வழி வகுத்த பெருமை ஸ்ரீலஸ்ரீ ஆறுமுகநாவலரேயே சாரும் பிரித்தானியர் எம்மை அடக்கி ஆண்டு வந்த காலத்தில் அவர்களை ஆயுதம் கொண்டு தாக்கி வெல்ல முடியாதென்பதை உணர்ந்த நாவலர் அகிம்சை மூலமே அவர்களை வெல்லலாம் என்பதை உலகுக்கு அறியச்செய்தார். யாழ்ப்பாணத் தமிழர் என்ற மட்டில் நாம் இதையிட்டு பெருமைப்படுவோம்.

யாழ். திறந்த வெளியரங்கில் நடைபெறும் நாவலர் மாநாட்டின் மூன்ரும் நாளான நேற்றைய காலை நிகழ்ச்சிகளுக்குத் தலைமை வகித்துப் பேசிய உதவி அரசாங்க அதிபர் திரு த. முருகேசம்பிள்ளை இவ்வாறு கூறினுர்.

நாவலர் பிறப்பதற்கு அரை நூற்ருண்டுகளுக்கு

தொடர்ந்து அவர் பேசியதாவது;

சிலை அமைப்பதுடன் நின்றுவிடாமல் நாவலரின் நாமத்தை நெஞ்சில் பதிக்க இளம் சிறுர்கள் மறந்துவிடக்கூடாது. நல்லூரில் அமைக்கப்பட்ட நாவலர்சிலையால் குறிப்பாக வடமராட்சி மக்களும், வலிகாமம் கிழக்கு மக்களும் அதிக பலன்பெறுவரென்றும், நாளாந்தம் அதே வழியால் பஸ்ஸில் பிரயாணஞ்செய்யும் இவர்கள் நாவலரது அனுட்டானத்தைப் பெறுவரென்றும் கூறினுர்.

நாவலர் உயர்ந்தது சமயப் பணியாலா? தேசியப் பணியாலா? என்ற விவாத அரங்கம் திரு. இ. சபாலிங்கம் தலைமையில் நடைபெற்றது.

திரு. சபாலிங்கம் பேசுகையில் சமய நூல் படிப்பதற்குத் தகுந்த

### 'நாவலர் பணிகள்' நூல்வெளியீடு

நாவலர் பணிகள் என்ற நூலை திரு. ச. அம்பிகைபாகன் அறிமுகம் செய்துவைத்தார். நூல்ஆய்வுரை நிகழ்த்திய மகாவித்துவான் தண்டபாணி தேசிகர் பேசுகையில் நூலாசிரியர் அவ்வப்போது நாவலர் எழுதியகடிதங்கள், கட்டுரைகள் கண்டனங்களை தொகுத்து எழுதியுள்ளார். புதுமுறையாக அழகாக அடித்தளம் போட்டுள்ளார் தமிழ்நாட்டுக்குப் புரியாத சில சொற்களை தவிர்த்திருக்கலாம் இங்குள்ள புத்தகங்களை தமிழ்நாட்டவரும் வாங்கிப்படிக்கும் படியாக செய்யவேண்டும் என்ருர்.

நூலாசிரியர் திரு. ச. தனஞ்சயராசசிங்கம் எம்.ஏ. நன்றிகூறினுர் தொடர்ந்து கவியரங்கம் நடைபெற்றது வித்துவான் நாவக்குழியூர் க. நடராசன் தலைமையில் நடைபெற்ற கவியரங்கத்தில் கவிஞர்கள்

## நாவலர் நிதிக்கு

### மலைநாட்டு மக்கள் அன்பளிப்பு

யாழ்ப்பாணம், செவ்

பண்டாரவளை தமிழ் மக்கள் சார்பில் திரு. எஸ். இரத்தினசபாபதி ஆயிரத்து ஐம்பத்தொரு ரூபாவை நாவலர் சபை மாநாட்டுப் பொருளாளரான செனட்டர் திரு. ரி. நீதிராஜாவிடம் நாவலர் சபைக்கு கையளித்தார். மாநாட்டின் இரண்டாம் நாள் மாநாட்டுப் பந்தலில் இந்தப் பணம் கையளிக்கப்பட்டது. காணிக்கையைஏற்ற செனட்டர். பண்டாவரளை தமிழ் மக்களுக்கு நன்றி தெரிவித்தார்.

தலவாக்கொல்லை தமிழ் சைவ மக்கள் சார்பாக தலவாக்கொல்லையைச் சேர்ந்த திரு. அருணசலம் பாலசுந்தரம் துணைப்பொருளாளரான திரு. என். இரத்தினசபாபதியிடம் நாவலர் மகாநாட்டில் வைத்து 901 ரூபா அன்பளிப்புச் செய்தார்.

......

### இளவரசரைக் கொல்ல மீண்டும் சதி

லண்டன், ஜூன் 30

பிரிட்டிஷ் இளவரசர் சாள்ஸ்சை கொலை செய்யும் முயற்சியில் இங்குள்ள நகரமொன்றில் தபால் பெட்டியினுள் வைக்கப்பட்டிருந்த வெடிகுண்டு தபால் பெட்டியை மட்டுமே சேதப்படுத்தியது என்றும் வேறு எதுவித அசம்பாவிதமும் ஏற்படவில்லை என்றும் அறிவிக்கப்பட்டது. இது இரண்டாவது முயற்சியாகும்.

### 700 புதிய ஹோட்டல் அறைகள்

கோட்டை, திங்கள்

இலங்கையில் எதிர்காலத்தில் உல்லாசப் பிரயாணிகளுக்கு ஏற்ற வசதிகளைச் செய்து கொடுக்க அரசாங்கம் திட்டமிட்டுள்ளது இதன்படி 1970-ம் ஆண்டு பூர்த்தியாவதற்குள் 700 புதிய ஹோட்டல் அறைகள் நிறுவப்படவுள்ளன.

## யாழ். நகரில் நடந்த முஸ்லிம்மாதர்மகாநாடு

யாழ்ப்பாணம் புதன்

யாழ். முஸ்லிம் மாதர் மஜ்லிஸ் கதீஜா மகா வித்தியாலய மண்டபத்தில் விமரிசையாக நடைபெற்றது.

கதீஜா மகாவித்தியாலய மாணவிகளின் ''அல்லாஹு அக்பர்'' என்ற கோஷத்துடன் திருமதி எச். ஈ. புள்ளைநாயகம் மஜ்லிஸ் கொடியை ஏற்றினுர். அல்ஹாஜ் என். எம். முகம்மது மீரான் முகியிதீன் ஆலிம் துவா ஓதினுர்.

ஆசிரியை திருமதி ருஹிலா தஹா தலைமை வகித்துப் பேசுகையில், யாழ்ப்பாணத்தில் முதல் முறையாக நடைபெற்ற இந்த மாதர் மஜ்லிஸ் மூலம் மாதர்கள் தங்களுக்கு வேண்டிய பல முறைகளை நிவிர்த்தி செய்வதற்கும் அரசாங்க உதவிகளை இலகுவான முறையில் பெறுவதற்கும் முடியும் என்ருர்.

காரியதரிசி திரு புல்லைநாயகம் பேசுகையில் மாதர்கள் ஒன்று கூடி தங்கள் தேவைகளை பூர்த்திசெய்ய

## ''உலக அறிவைப்பெற ஆங்கிலம் மிகவும் அவசியம்'

### எம். பி. வற்புறுத்து

பத்தேஹம, செவ்

''கிராமத்து மாணவர்கள்

என்று கூறிய அவர் ஆங்கிலத்தின் அவசியத்தை வற்

Digitized by Noolaham Foundation. noolaham.org | aavanaham.org

தலவாக் கொல்லை தமிழ் சைவ மக்கள் சார்பாக தலவாக் கொல்லையைச் சேர்ந்த திரு. அருணசலம் பாலசுந்தரம் துணைப்பெருளாளரான திரு என். இரத்தின சபாபதியிடம் நாவலர் மகாநாட்டில் ...

... எதுவித அசம்பாவிதமும் ஏற்படவில்லை என்றும் அறிவிக்கப்பட்டது. இது இரண்டாவது முயற்சியாகும்.

# அரசாங்க ஊழியருக்கு அதிக பலன் கிட்டும்

## சம்பள கமிஷன் அறிக்கை கூறுகிறது

கொழும்பு, செவ்

சகல அரசாங்க ஊழியருக்கும் சம்பள உயர்வு கொடுக்கப்பட வேண்டுமென சம்பள நிர்ணயக் கமிஷன் சிபார்சு செய்துள்ளது. சம்பளக் கமிஷனின் இடைக்கால அறிக்கை இன்று காலை மகாதேசாதிபதியிடம் கையளிக்கப்பட்டது.

சிறு ஊழியர்களுக்கு இதனுல் அதிக பலன் கிடைக்குமென எதிர்பார்க்கப்படுகிறது. நீண்டகால சேவையில் உள்ளோருக்கும் கூடுதலான சம்பள உயர்வு கொடுக்கலாமென சம்பளக் கமிஷன் தனது அறிக்கையில் கூறியுள்ளது.

அண்மையில் நடைபெற்ற பொதுவேலை நிறுத்தத்தைத் தொடர்ந்து சம்பளக் கமிஷனிடம் இடைக்கால அறிக்கை கோரப்பட்டிருந்தது தெரிந்ததே.

......

## 27-ம் திகதி வழக்குத் தாக்கல்

நல்லூர், செவ்.

சென்ற மே 1-ம் திகதி தடையை மீறி மேதின ஊர்வலம் நடத்தியதாக சீன கம்யூனிஸ்ட் கட்சியைச் சேர்ந்த 7 பேர் மீது யாழ்ப்பாணம் பொலிஸார் இம்மாதம் 27-ம் திகதி வழக்கொன்றை தாக்கல் செய்யவிருக்கின்றனர்.

## விசேஷ பஸ் சேவை

யாழ்ப்பாணம், செவ்.

நாவலர் விழாவுக்கென யாழ்ப்பாண குடாநாட்டு சகல பகுதிகளுக்கும் விஷேச இ. போ. ச. பஸ் சேவை நடைபெறுகிறது. நள்ளிரவு வரை இந்த பஸ் சேவைகள் இருக்கும்.

——

## நுண்ஆய்வாளர்

கைதடி. செவ்வாய்

கைதடி நாவற்குழிப் பகுதியின் மலேரியாத்தடை உத்தியோகத்தராகக் கடமையாற்றும் திரு. ஜேம்ஸ் ஞானப்பிரகாசம் நுண்ஆய்வாளராகத் தெரிவுசெய்யப்பட்டுள்ளார். ஜூலை 15-ம் திகதி முதல் பயிற்சிக்காக கொழும்பில்உள்ள தலைமைக் காரியாலயத்திற்கு செல்லவிருக்கும் இவர் அங்கு உலக சுகாதார நிபுணர்களிடம் பயிற்சிபெறும் வாய்ப்பை பெற்றுள்ளார்.

——

## புதிய வீதி

அல்லைப்பிட்டி, செவ்

அல்லைப்பிட்டி - வேலணை வீதியை திருத்தி புதுவீதி உருவாக்குவதற்கு அரசினரால் பணம் வழங்கப்பட்டுள்ளது. இவ்வருட முடிவிற்குள் இவ்வீதி திருத்தப்படுமெனவும் இவ்வீதி திருத்தப்படும் பட்சத்தில் அல்லைப்பிட்டியிலிருந்து வேலணை வரை பஸ் சேவை நடைபெறுமெனவும் தெரியவருகிறது.

கோணேஸ்வரம்பற்றி

## விவாதிக்க வேண்டாம்

திருகோணமலை, திங்கள்

திருக்கோணமலையில் சமீபத்தில் நடைபெறவிருக்கும் சர்வமதக் காங்கிரஸ் கூட்டத்தில் பிரச்னை மிகுந்த கோணேஸ்வரஆலய விவகாரம் குறித்து விவாதம் நடத்துவது தவிர்க்கப்பட வேண்டும் என்று திரு, கே. சி. கமலநேசன் மேற்படி காங்கிரஸ் கூட்டத்துக்குத் தலைமைதாங்கவிருக்கும் லெப்டினன்ட் தெய்வேந்திராவிடம் வேண்டுகோள் விடுத்துள்ளார்.

இப்பிரச்னைக்குப் பிரதமர் திரு. டட்லி சேனநாயக்கா தகுந்த முக்கியத்துவம் கொடுப்பதுடன், இதுகுறித்து விசாரணை செய்ய நியமிக்கப்பட்ட இக்கமிட்டி தற்போது விசாரணை நடத்தியும் வருகிறது. இன, மத குரோதங்களைத் தூண்டக்கூடியது என்ற தன்மையில் இந்த விவகாரம் அணுகப்படவேண்டும் என்றும் அவர் தமது கடிதத்தில் மேலும் குறிப்பிட்டுள்ளார்.

... நாளான நேற்றைய காலை நிகழ்ச்சிகளுக்குத் தலைமை வகித்துப் பேசிய உதவி அரசாங்க அதிபர் திரு த. முருகேசம்பிள்ளை இவ்வாறு கூறினுர்.

நாவலர் பிறப்பதற்கு அரை நூற்றுண்டுகளுக்கு முன்னர் பிரான்ஸ் ஏகாதிபத்தியவாதிகள் நாட்டை அடிமைப்படுத்தினுகள். தங்களது உரிமைகளை, கலாச்சாரத்தை மொழியை நமக்குள்ளே புகுத்த அவர்கள் முயற்சித்த வேளையில் நாவலர் பெருமான் தோன்றி தமிழையும், சைவத்தையும் காப்பாற்றினுர் என்று கூறிய திரு. முருகேசம்பிள்ளை தொடர்ந்து பேசுகையில் ஆறுமுகநாவலருக்கு ஆறு இடங்களில் சிலை எழுப்பப்படல் வேண்டும் என்றும், சென்னைப்பட்டினம், சிதம்பரம், நல்லூர், மட்டக்களப்பு, திருக்கேதீஸ்வரம், கொழும்பு ஆகிய இடங்களில் சிலையை நிறுவலாம் என்றும் யோசனை கூறினுர்.

... பணியாலா? தேசியப் பணியாலா? என்ற விவாத அரங்கம் திரு. இ. சபாலிங்கம் தலைமையில் நடைபெற்றது.

திரு. சபாலிங்கம் பேசுகையில் "சமய பாடம் படிப்பதற்குத் தகுந்த ஆசிரியர்கள் தற்போது இல்லாமலிருப்பதாகவும் இதனை விரைவில் நிவர்த்திசெய்யும் முயற்சியில் நாவலர்சபை ஈடுபட்டு தகுந்த, சிறந்த ஆசிரியர்களைத் தோற்றுவிக்கவேண்டும்" என்று கேட்டுக்கொண்டார்

திருவாளர்கள் பாலகிருஷ்ணன், எஸ். தம்பிராசா, செல்வி பரமேஸ்வரி கனகசபை ஆகியோர் சமயப்பணியில் நாவலர் உயர்ந்தவர் என்று வாதிட, திருவாளகள் ஆ. நாகலிங்கம், அ. கணேசையா, திருமதி தங்கமுத்து தம்பித்துரை ஆகியோர் தேசியப் பணியால் உயர்ந்தவர் என்று வாதிட்டனர். யாழ் பிரதேச ஆரிய கலாசாலைகளின் மாணவர்களும் இதில் கலந்து கொண்டனர்.

... செய்யவேண்டும் என்றுர்.

நூலாசிரியர் திரு. ச. தனஞ்சயராசசிங்கம் எம். ஏ. நன்றிகூறினுர். தொடர்ந்து கவியரங்கம் நடைபெற்றது வித்துவான் நாவக்குழியூர் க. செ. நடராசன் தலைமையில் நடைபெற்ற கவியரங்கத்தில் கவிஞர்கள் அம்பி, காசி ஆனந்தன், மகாகவி இ. நாகராஜன், காரை செ சுந்தரம்பிள்ளை, பா. சத்தியசீலன், சுந்தவனம் ஆகியோர் பங்குபற்றினர்.

——

# கதிரமலை ஆலய நிர்வாகம் தற்காலிகமாக ஒப்படைப்பு

கொழும்பு, செவ்.

கதிர்கர்மம் கதிரமலை கோயில் நிர்வாகப் பொறுப்பை அம்பாந்தோட்டை மாஜிஸ்திரேட் திரு. ஜி. ஜி. டி. சில்வா கப்புருளை வண. ஸ்ரீசித்தார்த தேரோவிடம் தற்காலிகமாக ஒப்படைத்துள்ளார். ரூபா 5000 பிணையில் ஆலயநிர்வாகமும் பொறுப்பும் அவரிடம் ஒப்படைக்கப்பட்டு, ஆலயத் திறப்புய் கையளிக்கப்பட்டது. இவரது கட்டளைக்கிணங்கவே இனிமேல் பூசைகள் நடைபெற வேண்டும் எனவும் தெரிவிக்கப்பட்டது.

திரு ராமகிரியிடம்இருந்த மேற்படி ஆலய நிாவாகப் பொறுப்பை, வண ஸ்ரீ சித்தார்த்த தேரோ பலவந்தமாக எடுத்துக் கொண்டதாக பிரதம மந்திரியிடம் புகார் செய்யப்பட்டிருந்ததும் இதனைந்தொடர்ந்து பொலிஸ் மா அதிபர் திரு. அலரிக் அபயகுணவர்த்தன விசேஷ பொலிஸ் பாதுகாப்பு கதிர்காமத்துக்கு அளித்திருந்ததும் தெரிந்ததே.

யாழ்ப்பாணம் எம். பி. திரு. ஜி ஜி. பொன்னம்பலம் இது சம்பந்தமாக பிரதமருடன் பேச்சுவார்த்தை நடத்தியதைத் தொடர்ந்து வழக்கொன்றும் தாக்கல் செய்யப்பட்டிருந்தது. இதனை விசாரணை செய்த அம்பாந்தோட்டை மாஜிஸ்திரேட் நிர்வாகப்பொறுப்பை வண. சித்தார்த்த தேரோவிடம் தற்காலிகமாக ஒப்படைக்கும்படியும் ரூபா 5000 பிணையில் செல்லும்படியும் உத்தரவிட்டார்.

# பூவலம் வரும் குரங்கு கனவு கண்டது

நியுயோர்க், ஜூலை 1

விண்வெளியில் இப்போது பூமியைச் சுற்றி வந்துகொண்டிருக்கும் அமெரிக்க குரங்கு விண்வெளியில் கனவு ஒன்று கண்டிருக்கிறது. அந்தக்குரங்கின் உடலில் பொருத்தப்பட்ட கருவிகளிலிருந்து குரங்கின் மூளை, தசை, இதயத் துடிப்பு ஆகியவைகள் மூலம் குரங்குகனவுகண்டிருப்பதை விஞ்ஞானிகள் கண்டறிந்துள்ளனர்.

விண்வெளியில் கனவு கண்டஒரேயொரு உயிர் வாழும் பிராணி இந்த போனி என்ற குரங்கு தான்.

இந்தக் குரங்கு விண்வெளிக் கலத்தில் நித்திரைசெய்து எழுந்தது; தண்ணீர் குடித்தது; தனக்குரிய அளவுஉணவு மாத்திரைகளை கடித்துச் சுவைத்துச் சாப்பிட்டது. அதன் உடல்நிலை நன்ருக இருக்கிறது. ஞாபகசக்திப் பரீட்சை ஒன்றுக்குத் தன்னை ஆளாக்கிக்கொள்ள அது தயாராக இருக்கிறது. கண்விழிப்புப் பரீட்சைக்கும் அது தயாராகக் காத்திருக்கிறது.

## விவசாயிகள் அவதி

உருத்திரபுரம், செவ்

கிளிநொச்சிப் பகுதியில் உருத்திரபுரம். சிவநகர்குடியேற்றத் திட்டங்களில் தண்ணீர் பற்ருக்குறையால் ஆடுமாடுகள்கூட இறக்கின்றனவாம். பயிர்கள் அனைத்தும் நாசமாகிவிட்டன. இதனுல் இப்பகுதிமக்கள் மிகவும்கஷ்டம் அனுபவிக்கின்றனர். ஆட்சிமன்ற உறுப்பினர்கள் இதில் கவனம் செலுத்துவார்களா என இப்பகுதி மக்கள் கேட்கின்றனர்.

# உலக அறிவைப்பெற ஆங்கிலம் மிகவும் அவசியம்'

## எம். பி. வற்புறுத்து

பத்தேஹம, செவ்

"கிராமத்து மாணவர்கள் உட்பட எல்லாருக்கும் ஆங்கில அறிவு இருக்கவேண்டியது மிகவும் அவசியம். சர்வதேசமொழிகள் ஐந்தில் ஆங்கிலமும் ஒன்ருகவிளங்குகிறது. சகல துறைகளிலும் ஒருவன் நல்ல அறிவையும், வளர்ச்சியையும் பெறுவதற்கு ஆங்கிலம் முக்கியமானது".

அம்பலாங்கொடை எம். பி. டாக்டர் எம். எச். சட்ஹாசேன இங்கு நடந்த பாடசாலை பரிசளிப்புவிழாவில் கலந்துகொண்டு பேசுகையில் குறிப்பிட்டார்.

"சில வருடங்களுக்கு முன்னர் ஆங்கிலம் படித்தவர்களுக்கும், ஆங்கிலத்துக்குமே முக்கியத்துவம் அளிக்கப்பட்டது. வேலையும் ஆங்கிலம் படித்தவர்களுக்கே வழங்கப்பட்டது. ஆனுல் சிங்களம் உத்தியோக பூர்வமான மொழியாகவும், ஆங்கிலம் இரண்டாவது மொழியாகவும் ஆக்கப்பட்ட பின்னர் கொழும்பு பாடசாலைகளில்கூட ஆங்கிலத்தின் அவசியம் குறைந்துவிட்டது' என்று கூறிய அவர் ஆங்கிலத்தின் அவசியத்தை வற்புறுத்தினுர்.

——

## புதுக்கட்சியால் முடியாதாம்

அல்லைப்பிட்டி, செவ்.

'இலங்கை முழுவதும் சிதறுண்டு கிடக்கும் எல்லாத் தமிழர்களையும் நாம் வேற்றுமை பாராது ஒன்ருக இணைக்க வேண்டும்.

இதனைச் செயற்படுத்த புதுப்புது கட்சிகளினுல்முடியாது. இலங்கைத் தமிழர்கள் அனைவரும் விரும்பும் கட்சியினுலேயே இது சாத்தியப்படும்' என புங்குடுதீவு இளைஞர் மன்ற மண்டபத்தில் நடைபெற்ற தமிழரசுக்கட்சி புங்குடுதீவுக் கிளையின் பொதுக் கூட்டத்தில் பேசிய கிளிநொச்சி எம். பி. பண்டிதர் கா. பொ. இரத்தினம் குறிப்பிட்டார்.

கூட்டம் திரு. வே சோமசுந்தரம் தலைமையில் நடைபெற்றது.

... நிவர்த்தி செய்வதற்கும் அரசாங்க உதவிகளை இலகுவான முறையில் பெறுவதற்கும் முடியும் என்ருர்.

காரியதரிசி திரு புல்லைநாயகம் பேசுகையில் மாதர்கள் ஒன்று கூடி தங்கள் தேவைகளை பூர்த்திசெய்யவும், அரசாங்கத்திடமோ, அல்லது பெரியோர்களிடமோ உதவிகளை பெறுவதற்கு மஜ்லிஸ் அவசியம் என்ருர். அல்ஹாஜ் என். எம். முகம்மது மீரான் முஹியிதீன் ஆலிம் 'இஸ்லாமும் பெண்களும்' என்ற விடயம்பற்றியும் ஜனுப். மு. இ. ஷஹர்ல் ஆலிஞப். எம். எம். அப்துல்காதர் மாவட்ட நீதிபதி ஜமீல் ஆகியோடும்பேசினர்.

உரை அரங்கிற்கு திரு. சல்மா சஹீது தலைமையில்உரை அரங்குநடைபெற்றது மாணவிகளின் இஸ்லாமிய கீதங்கள் இடம்பெற்றன.

திருமதி சுபைத்தா கபூர் தலைமையில் இலக்கிய வரலாறுகளான 'தலைப்பாத், திஹாசெல்விகளான பாயிஸா, மீரான் மொகியிதீன், ஜெஸீலா ஆகியோர்களால் நடத்தப்பட்டது திருமதி யூசுபு, ஜனுப் மு இ. ஷாஹுல் ஆகியோரும் பேசினர்.

# பீகார் மந்திரிசபை ராஜினமா

## சில தினங்களே உயிர் வாழ்ந்தது

பாட்ன, ஜூலை 1

சிலதினங்களுக்கு முன்னர்தான் ஆட்சிப்பொறுப்பையேற்ற பீகாரின் காங்கிரஸல்லாத கலப்பு மந்திரிசபை இன்று திடீரென்று ராஜினமாச் செய்து கொண்டது.

சமீபத்தில் நடந்த இடைத் தேர்தலின்பின் பீகாரில் காங்கிரஸ் ஆட்சி பதவியேற்றது. சிலதினங்களின் பின் அந்த மந்திரிசபை பதவி துறந்ததைத் தொடர்ந்து திரு. போலாபஸ்வான் தலைமையில் காங்கிரஸல்லாத கலப்பு மந்திரிசபை பதவியேற்றது இம்மந்திரிசபையில் நேற்றும் இருவர் புதிதாகச் சேர்த்துக் கொள்ளப்பட்டனர். இத்துடன் மந்திரிகளின் எண்ணிக்கை பத்தொன்பதாக அதிகரித்தது.

இன்றுகாலை பீகார் கீழ் சட்டசபை கூடியதும்மந்திரிசபைமீது அவநம்பிக்கைப் பிரேரணையொன்றுகொண்டு வருவதற்கு எதிர்க்கட்சியினர் கோரியதும் அதற்கு சபாநாயகர் திரு. ஆர். என். மண்டல் அனுமதியளித்தார்.

இச்சமயத்தில் முதன் மந்திரி போலாபஸ்வான் எழுந்து தமது மந்திரிசபை ராஜினமாச் செய்வதாக அறிவித்தார். தமது அரசாங்கத்திலுள்ள 34 அங்கத்தவர்களைக் கொண்ட ஜனசங் கட்சி தனது ஆதரவை விலக்கிக்கொள்ளப் போவதாகத் தெரிவித்திருப்பதால் தமது மந்திரிசபை ராஜினமா செய்வதைத்தவிர வேறுவழியில்லை என்று முதன்மந்திரி தெரிவித்தார்.


0 புதிய அமைப்போடு

0 பொலிவான முகப்போடு

0 பொருத்தமான படைப்போடு

**'ஈழநாடு' வாரமலர்**

ஜூலை 6-ம் திகதி முதல்

வெளிவருகிறது!

'ஈழநாடு' 10-வது ஆண்டு விழாப் போட்டியில் பரிசு பெற்ற

★ சிறுகதைகள்

★ கவிதைகள்

★ காவியம்

★ ஓரங்க நாடகம்

எல்லாம் 'ஈழநாடு' வாரமலரில்

ஜூலை 6-ம் திகதி முதல் தொடர்ந்து வெளிவரும்.

உங்கள் பிரதிக்கு இன்றே சொல்லிவையுங்கள்!!



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வரி விளம்பரம்

## விற்பனைக்கு

யாழ்ப்பாணம் காங்கேசன்துறைவீதியிலுள்ள 'பிரபல நகைக்கடை தளபாடங்களுடன் விற்பனைக்குண்டு. தேவையானோர் தொடர்பு கொள்ளவும். காலை 6—10 மணி, மாலை 4—6 மணி இல. 185, மானிப்பாய் வீதி, ஒட்டுமடம், யாழ்ப்பாணம். 1220

## அறிவித்தல்

எமது ஸ்தாபனத்திலிருந்து மதியாபரணம் இராஜரத்தினம் என்பவர் விலகிக்கொண்டார். தயவு செய்து எமது ஸ்தாபனம் சம்பந்தமான எந்தவிதமான தொடர்புகளையும் கொள்ள வேண்டாமென வேண்டுகின்றோம்.

துரை அன் கோ.,
23/3, ஸ்ரான்லி றேட்,
யாழ்ப்பாணம்.
1631

## ஏலவிற்பனை

நிவித்திக்கலை வட்டாபத்தை வீதியில் 10-ம் நம்பர் இலக்கக் கடையில் நகை அடைவு பிடிக்கும் கா. கனகரத்தினம் அவர்களிடம் 13-3-67 முதல் 30-6-68 வரை அடைவு வைத்து மீட்கப்படாத நகைகள் யாவையும் 1969 ஜுலை மாதம் 21-ந் திகதி திங்கட்கிழமை காலை 9 மணி தொடக்கம் மேற்படி கடையில் வைத்து பிரசித்த ஏலத்தில் என்னால் விற்கப்படும்.

பி. வெங்கடாசலம்,
ஏலத்தார்.
143, மெயின் விதி,
இரத்தினபுரி. 1629

## இலங்கை ஒலிபரப்புக் கூட்டுத்தாபனம்

### புதன் 2—7—69

(செய்திகள் காலை 7-00, பகல் 12-45, மாலை 6-00, இரவு 9-00)

344 மீ அன் 61 மீ

காலை 6-30 நாதாஞ்சலி, 6-35 சைவநற்சிந்தனை, 6-40 இஸ்லாமியநற்சிந்தனை, 7-15 துதிப்பாடல்கள், 7-30 திரைகானம், 8-00 செய்திச் சுருக்கம், 8-03 நிலையஒலிப்பதிவுகள், 8-15 இஸ்லாமியகீதங்கள், 8-30 செய்திச்சுருக்கம்.

344 மீ அன் 49 மீ

பகல் 12-00 செய்திச் சுருக்கம், 12-03 திரைகானம், 1-00 திரைகானம், 1-30 செய்திச்சுருக்கம்.

344 மீ அன் 61 மீ

மாலை 4-25 செய்திச்சுருக்கம், 4-28 கல்விஒலிபரப்பு, 5-00 செய்திச்சுருக்கம், 5-03 பிறந்ததினவாழ்த்துக்கள், 5-15 மாணவர்மன்றம், 5-45 படத்திலிருந்து.

இரவு 6-15 வாத்திய இசை, 6-30 கிராமசஞ்சிகை, 7-00 செய்திச் சுருக்கம், 7-45 நாடகம், 8-00 செய்திச்சுருக்கம், 8-03 முஸ்லிம்நிகழ்ச்சி, 9-15 புல்லாங்குழல்இசை, 9-30 பேச்சு, 10-00 நேயர்கேட்டவை, 10-30 செய்திச்சுருக்கம்.

## நண்பர்களுக்கு ஓர் அறிவித்தல்

30-6-69ல் நடைபெறவிருந்த முல்லைத்தீவு விளையாட்டரங்கு சிரமதான வேலை நிதி அதிர்ஷ்டலாபச் சீட்டிழுப்பு 28-7-69 இரவு 7-00 மணியளவில் நடைபெறும். ஆதரவாளரின் சிரமத்திற்கு வருத்தப்படுகின்றோம்.

ம. சூ. வஸ்தியாம்பிள்ளை,
தலைவர்,
முல்லைத்தீவு
விளையாட்டரங்கு
சிரமதானக்குழு.
25-6-69. 1630


**ராஜா** (யாழ்ப்பாணம்)
தினசரி 2-30, 6-30, 10-00.
பிரீபோயா, போயா 10-30
ஜெமினி - சரோஜாதேவி
நடித்த
**ஆடிப்பெருக்கு**



**வெஸ்லி சினிமா**
மானிப்பாய்
தினசரி 6-30, இரவு 10-00
பிரிபோயா, போயா 2-30 மணி
எஸ்.எஸ்.ஆர்-விஜயகுமாரி
நடித்த
**காக்கும் கரங்கள்**


யாழ். மாவட்ட

## சமூகசேவை கொடித் தினம்

யாழ்ப்பாணம். புதன்

யாழ்ப்பாணம் மாவட்ட சமூகசேவைப் பகுதியினரின் கொடித்தினம் இம்மாதம் 5-ம் திகதி கொண்டாடப்படவிருக்கின்றது. இதற்கான ஒழுங்குகளை யாழ். மாவட்ட சமூக சேவை உதவி அதிபர் திரு. என்.

## யாழ்ப்பாணம் பழைய பூங்காவில் உள்ள மலைவேம்பு ஏல விற்பனை

யாழ்ப்பாண மாவட்ட அரசாங்க அதிபரின் வாசஸ்தலத்தில் (பழைய பூங்காவில்) கடும் காற்றுக் காரணமாக ஒரு பெரிய மலைவேம்பு வேர் சாய்ந்துவிட்டது. இம் மரம் 1969-ம் ஆண்டு ஆடி மாதம் 15-ம்திகதி(15-7-69) காலை 10 மணிக்கு பிரசித்த ஏலத்தில் விற்கப்படும்.

ஏலத்தில் பங்குபற்றுவோர் முன்பதாகவே தங்கள் மனத்திருப்திக்காக மரங்களின் தரத்தையும் பெறுமதியையும் பார்வையிடும்படி கேட்டுக்கொள்ளப்படுகின்றனர்.

மேலதிக விபரங்கள் கீழ்க்கையொப்பமிட்டவரிடம் அல்லது யாழ்ப்பாணக் கச்சேரி பொதியாளரிடம் (றெக்கோட் கீப்பரிடம்) இருந்து பெற்றுக்கொள்ளவும்.

கா. கந்தசாமி,
யாழ். மாவட்ட அரசாங்க
அதிபருக்காக.
கச்சேரி,
யாழ்ப்பாணம்.
26 ஜுன், 1969. 1625

## வளர்மதிக்கு வெற்றிக் கேடயம்

முல்லைத்தீவு, செவ்

முள்ளியவளை காட்டுவிநாயகர் சனசமூக நிலையத்தினரால் நடாத்தப்பட்ட உதைபந்தாட்டப் போட்டியின் இறுதி ஆட்டம் சிறப்பாக நடைபெற்றது.

முள்ளியவளை கிராமசபையின் பொது விளையாட்டு மைதானத்தில் முல்லைத்தீவு இளைஞர் முன்னேற்றக்கழகத்தினருக்கும் முள்ளியவளை வளர்மதி விளையாட்டுக்கழகத்தினருக்குமிடையே நடந்த உதைபந்தாட்ட இறுதிப் போட்டி மிகவும் விறுவிறுப்புடன் நடந்தது. முல்லைத்தீவு இளைஞர் முன்னேற்றக்கழகத்தின் விளையாட்டு வீரர் ஒருவர் தனது பக்கத்துக் கோலுக்குள் பந்தைச் செலுத்திவிட்டார். இதன்படிஏற்பட்டகோலால் முள்ளியவளை வளர்மதி விளையாட்டுக் கழகத்தினர் வெற்றிபெற்றுஇவ்வாண்டுக்குரிய வெற்றிக் கேடயத்தைப் வெற்றுக் கொண்டனர்.

## விளையாட்டுப் போட்டிகள்

யாழ்ப்பாணம், புதன்

யாழ். பாடசாலை

## ஹொக்கி போட்டி முடிவுகள்

யாழ்ப்பாணம், புதன்

யாழ்.பாடசாலை ஹொக்கி விளையாட்டுச் சங்கத்தினால் யாழ். மாவட்டப் பாடசாலைகளிடையே நடாத்தப்பட்டுவரும் ஹொக்கிப்போட்டியில், வட்டுக்கோட்டை யாழ்ப்பாணக் கல்லூரியும், யாழ். கனகரட்ணம் மத்திய மகாவித்தியாலயமும்போட்டியிட்டன. இப்போட்டியில் முதல் பிரிவில் யாழ்ப்பாணக் கல்லூரியும் இரண்டாம் பிரிவில் கனகரட்ணம் மத்திய மகாவித்தியாலயமும் வெற்றி பெற்றன.

முதல் நடைபெற்ற இரண்டாவது போட்டியின்போது, ஆட்டம் மிகவும் ரசிப்பாகக் காணப்பட்டபோதும் இடைவேளையின் முன் கனகரட்ணம் மத்திய மகாவித்தியாலயம் 2 கோல்களை மிகசாதுரியமாகப் போட்டுவிட்டன. இடைவேளையின் பின் ஆட்டம் மிகவும் போட்டியாக இருந்தபோதும் கனகரட்ணம் மத்திய மகாவித்தியாலயம் மேலும் ஒரு கோலைப் போட்டது. ஆட்ட முடிவில், கனகரட்ணம் மத்திய மகாவித்தியாலயம் 3-0 கோல்களால் வெற்றி பெற்றது.

இரண்டாவது நடைபெற்ற, முதல் பிரிவு ஆட்டத்தில், யாழ்ப்பாணக் கல்லூரி ஆட்டம் தொடங்கி முடிவடையும் வரை மிக இலகுவாகக் கோல்களைப் போட்ட வண்ணமேஇருந்தது. இக்கோஷ்டி இடைவேளையின்பேது 3-0 கோல்களைப் பெற்றிருந்தது. இடைவேளையின்பின் யாழ்ப்பாணக் கல்லூரி மிகவேகமாக விளையாடிஅடுத்தடுத்து மேலும் 5கோல்களைப்போட்டது. ஆட்டமுடிவில் யாழ்ப்பாணக் கல்லூரி, கனகரட்ணம் மத்திய மகாவித்தியாலயத்தை 8-0 கோல்களால் வெற்றி பெற்றது.

கனகரட்ணம் மத்தியமகாவித்தியாலய மைதானத்தில் நடைபெற்றஇப்போட்டிக்கு திருவாளர்கள் பூபாலும், மகேந்திரனும் மத்தியஸ்தர்களாகக் கடமையாற்றினர். (தே. நி)

## 'களிமண்ணில் தெய்வங்களை கண்டபரமஹம்ஸர்''

வல்வெட்டித்துறை, செவ்.

''ஸ்ரீராமகிருஷ்ண பரமஹம்ஸர் இளமையில் களிமண்ணினால் தெய்வங்களின் வடிவம் அமைப்பதிலும், புராண இதிகாச கதைகளைக் கேட்பதிலும் அதிகம் விருப்பம் கொண்டவராக இருந்தார் இராணி இராசமணி கட்டுவித்த தக்ஷணேசுவர ஆலயத்தில் பூஜகராக அமர்ந்து காளிதேவியைப் பூஜித்து வந்தார்'

பருத்தித்துறை ஸ்ரீசாரதா நிலையத்தைச் சேர்ந்த திரு. ஆர். இரத்தினசபாபதி ''ஸ்ரீ ராமகிருஷ்ண பரமஹம்ஸர்'' என்னும் பொருள் பற்றி வல்லிபுர ஆழ்வார் கோவிலில் பேசுகையில் மேற்கண்டவாறு கூறினர்.

பருத்தித்துறை இலங்கை வங்கி முகாமையாளர் திரு. எஸ். கந்தப்பு தலைமையில் நடைபெற்றது.

திரு. இரத்தினசபாபதி மேலும் பேசுகையில் ''தூய அன்னை சாரதாதேவி இவருக்கு வாழ்க்கைத் துணைவியாகி பணிவிடை செய்து இவர் கடைப்பிடித்த சமய சாதனைகளில் அம்மையாரும் ஒத்தாசையாக இருந்தார். இவருடைய போதனைகள் யாவரும் விளங்கக்கூடிய முறையில் எளிதானவை'' என்று கூறினர்.

## இன்றைய பலன்

ஆனிமாதம் 18-ம் திகதி

2-7-69

மேஷம்- காத்திருந்த பணம் கைக்குக் கிடைக்கலாம். கடமையில் ஆர்வம் பிறக்கும். மேலதிகாரிகளின் ஆதரவு தாராளமாகக் கிடைக்கும்.

ரிஷிபம்- மனம் நிறைந்த வாழ்வு இன்றுகிடைக்கும். அறவழிகளில் நாட்டம் பிறக்கும். இரக்க சிந்தையுடன் இறை நம்பிக்கையும் பிறக்கும்.

மிதுனம்- தொழில் விடயமாகப் பிறஇடத்துக்குச் செல்ல நேரிடும்.

## காண்ஸ்டபிள்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 'மாவை உற்சவத்தின்போது சட்டத்தை அமுல்படுத்துங்கள்'

யாழ்ப்பாணம், புதன்

''தொண்டமானாறு செல்வச் சந்நிதி ஆலய வழக்குச் சம்பந்தமாக வழங்கப்பட்ட தீர்ப்பும், திரு. ஸி. சுந்தரலிங்கத்துக்கு எதிராக வழங்கப்பட்ட தீர்ப்பும் ஆகமங்கள் பற்றி நிபுணத்துவமிக்க ஆதாரங்களை ஆராய்ந்த பின்பே வழங்கப்பட்டது. மேலும் தேசவழமைச் சட்டம், இலங்கை அரசியலமைப்பின் 29ம் பிரிவு மூன்றும் பகுதி போன்றவற்றை முற்ருக ஆராய்ந்தே அப்பீல் நீதிமன்றம், தீண்டாமையை ஒழிப்பதற்குச் சமூகக் குறைபாடு ஒழிப்புச் சட்டம் வல்லமையும், சக்தியும் பெற்றதெனத் தீர்ப்பளித்தது. ஆகையால் இவற்றை அடிப்படையாகக் கொண்டு எதிர்வரும் மாவை கந்தசுவாமிகோவில் உற்சவத்தின்போது சட்டத்தை நடைமுறைக்குக் கொண்டுவருவார்கள் என நம்புகிறோம்.''

அகில இலங்கைச் சிறுபான்மைத் தமிழர் மகாசபைத் தலைவர் திரு. எம். ஸி. சுப்பிரமணியம், உதவிப் பொலிஸ் மா அதிகாரி, வடமாகாண அரசாங்க அதிபர், வடமாகாணப் பொலிஸ் சுப்பிரிண்டன் ஆகியோருக்கு எழுதியுள்ள 'கடிதமொன்றில் மேற்கண்டவாறு தெரிவித்துள்ளார்.

அக்கடிதத்தில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது

ஆலயப் பிரவேசத்தைத் தடுக்கும்முகமாக அமைக்கப்படும் எந்த வடிவிலான தடையும் சட்டத்திற்குமாறானது என்று அட்டோர்ணி ஜெனரல் அண்மையில் பிரகடனப்படுத்தியுள்ளார். ஆலயப் பிரவேசம் சம்பந்தமாக 1966 ஏப்ரல் மாதம் நாம் ஆரம்பித்த சத்தியாக்கிரகப் பிரசார நடவடிக்கைகளுக்கு முன்னர் இல்லாதிருந்த வேலிகள், கதவுகள் போன்ற புதிய தடைகள் பொலிஸாரினால் அகற்றப்படுவதற்குரிய நடவடிக்கைகளை மேற்கொள்ளுவீர்கள் என நம்புகிறோம் அல்லது நீதிமன்ற உத்தரவைப் பெற்று இத்தகைய நடவடிக்கைகள் தடுக்கப்பட வேண்டும். இதுவரையில் அமைக்கப்பட்டுள்ள தடைகளை நீதிமன்ற உத்தரவின் பேரில் அல்லது உங்கள் ஆணைப்படி அகற்றிவிடும்படி வேண்டுகிறோம்.

வழிபாட்டுக்காரர் எவரையும் விடத் தொண்டர்கள் என்று அழைக்கப்படுபவர்கள் எந்தவகையிலும் தகுதியுடையவர்கள் அல்ல. இத்தகைய பொது விதிக்கு விலக்காக அமையக்கூடிய ஒரே பகுதியினர் ஆலயக் குருக்களே. வழிபாட்டுக்காரர் அனைவரும் பரிபாலனரைத் தவிர சம உரிமைகள் அனுபவிக்க உரித்துடையவர்களே. தொண்டர் படை என்ற போர்வையில் சிறுபான்மைத் தமிழ் மக்களை பயமுறுத்துவதற்கு மேற்கொள்ளப்படும் முயற்சிகள் யாவும் அவற்றின் அந்தரங்க நோக்கங்களும் தீர்க்க ஆராயப்பட வேண்டியவையே.

## விவசாயப் போட்டி

திருக்கோணமலை, செவ்

திருக்கோணமலை மாவட்டத்தில் 68,69-ம் ஆண்டுகளுக்குரிய பெரும்போக விவசாயப் போட்டியில் தம்பலகாமம் மேற்குக் குடியேற்றவாசியான திரு. எ. கே. ஜயதிச ஏக்கர்ஒன்றுக்கு 27 புசல் வீதம் விளைவித்து திருக்கோணமலை மாவட்டத்தில் முதலாவதாகத் தேர்ந்தெடுக்கப்பட்டுள்ளார். மேற்படி குடியேற்றத்தில் வதியும் ஜனுப் எம். ஏ. சமது ஏக்கருக்கு 204 4/3 புசல் வீதம் விளைவித்து தம்பலகமம் காரியாதிகாரி பிரிவில் முதலாம் இடத்தைப் பெற்றுள்ளார்.

முள்ளிப்பொத்தானையைச் சேர்ந்த திரு. ஏ. சி. ரிக்கிரி பண்டா என்பவர் இதே போட்டியில் அதிக விளைவை ஏற்படுத்தியவர் என்ற முறையில் மூன்ருவது பரிசுக்குத் தகுந்தவராகத் தெரிவு செய்யப்பட்டுள்ளார்.

## புதிய நிர்வாகிகள்

பூநகரி, செவ்வாய்

பூநகரி மட்டுவில் நாடு பயிர்ச் செய்கைக் குழுவுக்கான தேர்தல் பூநகரி கமத்தொழில் சேவைஉத்தியோகத்தர் திரு.மகேந்திரன் தலைமையில் நடைபெற்றது.

பின்வருவோர் உத்தியோகத்தராகத் தெரிவு செய்யப்பட்டனர். தலைவர் திரு.ஆ. சதாசிவம், காரியதரிசி- திரு. பொ. தில்லைநாதன், தனதிகாரி- திரு. பொ. நவரத்தினம், 9 பேர் கொண்ட நிர்வாக சபையும் தெரிவு செய்

## தமிழ்மொழியில் கற்றவருக்கு முக்கிய இடம்

### தமிழ் நாடு அரசு ஏற்பாடு

சென்னை, ஜுலை 1

தமிழ்நாட்டில் அரசாங்கத்துறைகளில் ஏற்படும் காலி இடங்களுக்கு தமிழ் மூலம் கல்வி பயின்ற மாணவர்களுக்கு முக்கியத்துவம் கொடுக்கப்படும் என்று தமிழ்நாடு கல்வி அமைச்சர் திரு. மாதவன் அறிவித்திருக்கிறர்.

எல்லாத் துறைகளிலும் தமிழுக்கு முக்கிய இடம் கொடுப்பதே தமது நோக்கம் என்றும், தமிழ் நாட்டில் தமிழ் அரசாங்க மொழியாக இருப்பதனல் தமிழ் முக்கிய இடம் பெறுவது முற்றிலும் நியாயமே என்றும் திரு மாதவன் குறிப்பிட்டிருக்கிறர்.

தமிழுக்கு முக்கிய இடம் கொடுக்கப்படும் அதே சமயம் ஆங்கிலத்தின் அவ

ஆங்கிலக் கல்வியின் அபிவிருத்திக்கு வேண்டிய ஏற்பாடுகளும் செய்யப்படும் என்று அவர் கூறினர்.

## கடத்தலில் கப்பல் தலைவர்

கோட்டை, செவ்வாய்


துறைமுகத்திலுள்ள கப்பலொன்றில் தலைவர் கள்ளக் கடத்தல் மூலம் நாட்டுக்குள் தங்கத்தையும் ஹொங் கொங், மலேசியா டாலர்களையும் கொண்டுவர முயன்றதாகத் துப்புக்கிடைத்ததைத் தொடர்ந்து சுங்க அதிகாரிகள் அவரைச் சோதனை செய்து டாலர்களைக் கைப்பற்றியுள்ளனர். குற்றம் விதிக்குமுன் அவர் கடத்தியுள்ளதாகக் கருதப்

சமூகசேவைப் பகுதியினரின் கொடித்தினம் இம்மாதம் 5-ம் திகதி கொண்டாடப்படவிருக்கின்றது. இதற்கான ஒழுங்குகளை யாழ். மாவட்ட சமூக சேவை உதவி அதிபர் திரு. என். சிவசிதம்பரம் மேற்கொண்டுள்ளார். (கா. நி.)


மானிப்பாய்
தினசரி 6-30, இரவு 10-00
பிரிபோயா, போயா 2-30 மணி
எஸ்.எஸ்.ஆர்-விஜயகுமாரி
நடித்த
காக்கும் கரங்கள்
(புதிய கொப்பி)

ராணி
(யாழ்ப்பாணம்)
[தினசரி 3 காட்சிகள்]
ஜெய்சங்கர்
வரலக்ஷ்மி
உயிரா மானமா

வின்ஸர்
(யாழ்ப்பாணம்)
[தினசரி 4 காட்சிகள்]
* சிவாஜி
* பத்மினி
நடித்த
திருமால் பெருமை

இப்பொழுது நடைபெறுகிறது
கெப்பிட்டல் (கொழும்பு)
பிளாஸா (வெள்ளவத்தை)
விஜயா (மட்டுநகர்)
ஸ்ரீ கிருஷ்ணு (திருமலை)
மைலன் (கொழும்பு)
வெலிங்டன் (யாழ்ப்பாணம்)
ஆகிய திரைகளில்
ஸ்ரீதரின் கதை, வசனம், டைரக்ஷனில் உருவாகி
★ சிவாஜிகணேசன்
★ கே. ஆர். விஜயா
முத்துராமன்
கீதாஞ்சலி
நடித்த

நெஞ்சிருக்கும் வரை

கிங்ஸ்லி (கொழும்பு)
★ எம். ஜி. ஆர்.
★ சாவித்திரி
நடித்த
தேவரின்
வேட்டைக்காரன்


...பெற்றுக் கேடயத்தைப் வென்றுக் கொண்டனர்.

## விளையாட்டுப் போட்டிகள்

யாழ்ப்பாணம், புதன்

யாழ்ப்பாணம் சென் பற்றிக்ஸ் கல்லூரியினதும், யாழ். மத்திய கல்லூரியினதும், வருடாந்த விளையாட்டுப்போட்டி, அவ்வவ் கல்லூரி மைதானங்களில் வருகிற 5-ம் திகதி நடைபெற ஏற்பாடுகள் செய்யப்பட்டு வருகின்றன. (தே. நி)

## றேஞ்சஸ் வெற்றி

திருமலை, செவ்.

கிண்ணியாறேஞ்சஸ் உதைபந்தாட்டக் கோஷ்டிக்கும் உப்புவெளிஐமாலியா உதைபந்தாட்டக் கோஷ்டிக்குமிடையில் கிண்ணியாமுற்றவெளியில் நடைபெற்ற உதைபந்தாட்டப் போட்டியில் கிண்ணியா ரேஞ்சஸ் 4—3 கோல்களால் வெற்றியீட்டியது.

## டிராக்டர் மோதி ஒருவர் மரண

திருமலை, செவ்

கந்தளாய் இலங்கைச் சீனி கூட்டுத்தாபனத்தைச் சேர்ந்த கொந்தருத்துக்காரர் ஒருவர் சைக்கிளில் சென்றுகொண்டிருந்த பொழுது கூட்டுத்தாபன டிராக்டர் ஒன்று மோதி விபத்துக்குள்ளாகி இறந்தாரெனப் பொலிசார் தெரிவித்தனர்.

## மகாகும்பாபிஷேகம்

யாழ்ப்பாணம், புதன்

சங்கானை இலுப்பைத் தாழ்வுமுருகமூர்த்திகோவில் வள்ளிநாயகி தெய்வநாயகி சமேத ஸ்ரீ சண்முகநாத சுவாமி மகாகும்பாபிஷேகம் இறுதி நாளாக இன்று நடைபெறுகிறது. கடந்த இரு தினங்களும் விசேஷபூசைகள் நடைபெற்றன.


வல்வெட்டித்துறை
ரஞ்சனு தியேட்டர்
தினசரி 6-30, 9-30.
பிரிபோயா, போயா காலை 10-30
எம். ஜி ஆர். — ஜெயலலிதா
நடித்த
ஒளிவிளக்கு
(ஈஸ்ட்மென் கலர்)

MANOHARA
JAFFNA
Daily 2, 6 & 10-00 P M
Yul Brynner
in
TEN COMMANDMENTS


...கும். அறவழிகளில் நாட்டம் பிறக்கும். இரக்க சிந்தையுடன் இறை நம்பிக்கையும் பிறக்கும்.

மிதுனம்- தொழில் விடயமாகப் பிறஇடத்துக்குச் செல்ல நேரிடும். வேண்டியவர் ஒருவரின் விரோதத்தைத் தேடிக்கொள்ளலாம் அடக்கம் நன்று.

கடகம்- விடயங்கள் அனைத்தும் கண்ணியமாகத் திரும். வீட்டில் சுப கருமங்கள் இடம்பெறும். குடும்பத்தில் பிணைப்புகள் இறுகும்.

சிம்மம்- வியாபாரத்தில் நஷ்டத்துக்கு இடமுண்டு தொழில்துறையில் தொல்லைகள் தோன்றக்கூடும். அதிக பேச்சைத் தவிர்க்கவும்.

கன்னி- எதிர்பாராத திருப்பங்கள் இன்று வாழ்க்கையில் புதிய மாற்றங்களை உருவாக்கும். பெரியவர் ஒருவரின் ஆதரவு கிடைக்கும். கண்ணியமான தினம்.

துலாம்- வியாபாரத் துறையில் விருத்தியுண்டு. செய்தொழில் சிறப்படையும். வாழ்க்கையில் சுமுகமான நிலை தென்படும்.

விருச்சிகம்- எதிர்பார்த்த நற்செய்தி இன்று கிடைக்கும். பொருளாதாரத்துறையிலும் முன்னேற்றம் காணப்படும். வசதிகள் பெருகும்.

தனுசு- சிந்தனையில் குழப்பநிலை உருவாகும். விவசாயத்துறை மூலம் நஷ்டமேற்படலாம். அதிக முதலீட்டைத் தவிர்த்துக்கொள்ளவும்.

மகரம்- ஆத்திரப்படுவதால் அனர்த்தங்கள் விளையக்கூடும். எதிலும் பொறுமையுடன் இருப்பது விரும்பத்தக்கது. உடல்நலம் பாதிக்கப்படலாம்.

கும்பம்- நிதியில் அபிவிருத்தியுடன் நிம்மதி பிறக்கும். பந்துக்கள் கொண்டாட்டமும் விருந்தும் உண்டு.

மீனம்- சகோதரவழியால் மனதில் சஞ்சலம் தோன்றக்கூடும். உள்வீட்டிலேயே பூசல் தலைதூக்கும், உஷாராக இருக்கவேண்டும்.

— சோதிடக்கலாநிதி —

திருமலை

க. வேலுப்பிள்ளை


REGAL JAFFNA
Daily 4-45, 7 & 9-45 p.m
Robert Vaughn
Eleanor Parker
in
How to steal the World


...தார். இவருடைய போதனைகள் யாவரும் விளங்கக்கூடிய முறையில் எளிதானவை'' என்று கூறினர்.

## கான்ஸ்டபிள் கொலை

### ஒருவர் றிமாண்டில்

காலி, புதன்

காலி பொலிஸ் நிலையத்தைச் சேர்ந்த பொலிஸ் கான்ஸ்டபிள் கோப்லூட் வெட்டுண்ட நிலையில் கொலை செய்யப்பட்டு கிடந்தது சம்பந்தமாக உத்தியோகப் பற்றற்ற மாஜிஸ்திரேட் திரு. றெக்ஸ் விக்கிரமசிங்க ஸ்தல விசாரணை நடாத்தினர் பத்தேஹமவில் இக்கோர சம்பவம் நடைபெற்றுள்ளது:

கால் வாளால் வெட்டப்பட்டு ஸ்தலஸ்திலேயே கான்ஸ்டபிள் மாண்டு கிடந்தார். மரணமானவர் பத்தேஹம பொலிஸ் நிலையத்தில் கடமையாற்றியவர் என்றும், சில மாதங்களுக்கு முன்னர் தான் அவர் காலிக்கு இடமாற்றலாகி வந்தவரென்றும் விசாரணையில் தெரிவிக்கப்பட்டது.

பிரேத பரிசோதனையும் நடைபெற்று டி. சூரியாராச்சி என்பவரை சந்தேகத்தின் பேரில் பொலிசார் ஆஜர் செய்தனர்.

இம்மாதம்7-ம் திகதிவரை சந்தேகநபரை றிமாண்டில் வைக்கும்படி உத்தரவிடப்பட்டது. மற்றும் மூவரை இக்கொலை சம்பந்தமாக பொலிசார் தேடுகின்றனர்.

## நவீன வசதி

உடுப்பிட்டி, செவ்வாய்

கரணவாய் தெற்குச் சலவைத் தொழிலாளருக்கு உடுப்பிட்டிக் கிராமசபை நவீன வசதிகள் செய்து கொடுக்க விருக்கின்றது. கிராமசபையின் உபதலைவரும், 2-ம் வட்டார உறுப்பினருமான திரு. பி. கே குலசிங்கத்தின் முயற்சியைத் தொடர்ந்து சலவைத் தொழிலாளருக்கு 2000ரூபா செலவில் மணற்பாதி ''கிராமத்தனை'' என்னுமிடத்தில் கிணறு, தொட்டி வசதிகள் செய்து கொடுக்கப்படவுள்ளது

## குருபூசை

உடுவில், செவ்வாய்

மானிப்பாய் மெமோரியல் பாடசாலை இந்து மாணவர் சங்கத்தினர் மாணிக்வாசகர்சுவாமிகள் குருபூசையை சிறப்பாக கொண்டாடினர். மாணவர்களின் திருவாசக பாடல்களும் மாணிக்கவாசகர் காட்டிய வழி பற்றி ஆசிரியர் எம். குமாரவேலுவின் சொற்பொழிவும் இடம் பெற்றன.

...கத்தராகத் தெரிவு செய்யப்பட்டனர். தலைவர் திரு. ஆ. சதாசிவம், காரியதரிசி- திரு. பொ. தில்லைநாதன், தனாதிகாரி- திரு. பொ. நவரத்தினம், 9 பேர் கொண்ட நிர்வாக சபையும் தெரிவு செய்யப் பட்டது.

## தாக்கப்பட்டாராம்

புலோலி, செவ்வாய்

புலோலிதெற்கில் சாரையடி என்னும் இடத்தில் ஒரே குடும்பத்திற்குள் ஏற்பட்ட வாய்ச்சண்டையில் இரும்புக்கம்பியால் ஒருவர் தாக்கப்பட்டசம்பவம் நிகழ்ந்துள்ளது.

இச்சம்பவத்தில் சின்னையா வீரகத்தி (வயது 40) என்பவர் இரும்புக்கம்பியால் மண்டையிலும் கைகளிலும் தாக்கப்பட்ட நிலையில் மந்திகை ஆஸ்பத்திரியில் சிகிச்சை பெற்று வருகின்ருர்.

## உணவுற் பத்திக்கு 500ஏக்கர்

பூநகரி, செவ்வாய்

பூநகரி மன்ஞர் வீதியிலுள்ள பெரிய ஈனச்சி என்னுமிடத்தில் உப உணவுற்பத்திக்காக 5 ஏக்கர் வீதம் 100 பேருக்கு 500 ஏக்கர் வழங்கப்பட்டுள்ளது. இதற்கான காணிக் கச்சேரிகள் நடைபெற்று நெடுந்தீவு, வேலணை, கோப்பாய், பூநகரி, யாழ்ப்பாணம், ஆகிய பகுதிகளில் இருந்து100பேர் தெரிவு செய்யப் பட்டுள்ளனர்.

## பரிசளிப்பு விழா

பண்டத்தரிப்பு, செவ்.

வருகிற 7-ம் திகதி நடைபெறவிருக்கும் இளவாலை கன்னியர் மகாவித்தியாலய பெற்ருேர்தின பரிசளிப்பு விழாவின்போது வடமாநில கல்வியதிகாரி திரு தணிகாசலம் கலந்து பரிசில்களை வழங்குவார் மாணவிகளின் கலைநிகழ்ச்சிகளும் இடம் பெறும்.

...இடம் பெறுவது முற்றிலும் நியாயமே என்றும் திரு மாதவன் குறிப்பிட்டிருக்கிருர்.

தமிழுக்கு முக்கிய இடம் கொடுக்கப்படும் அதே சமயம் ஆங்கிலத்தின் அவசியத்தையும் தாம் மறப்பதற்கில்லை என்று அவர் குறிப்பிட்டுள்ளார்.

## வால்முட்டை

திருக்கோணமலை, செவ்.

திருக்கோணமலையில் உப்புவெளி என்னுமிடத்தில் ஒரு வீட்டில் கோழி ஒன்று ஒரு சிறிய வால் முட்டையை இட்டுள்ளது. இந்த முட்டையின் பிறபுறத்திலேயே சிறியதொரு வாள் வளைந்துகாணப்படுகிறது. இந்த விநோத முட்டையைப் பலர் பார்த்துச் செல்கின்றனர்.

## ''சாதாரண வாழ்வே மகிழ்ச்சி தரும்''

கண்டி, செவ்வாய்

''சாதாரண வாழ்க்கைதான் மகிழ்ச்சியையும், நிம்மதியையும் அளிக்கும்'' என்று தேசிய உயர்கல்விச் சபைத் தலைவர் டாக்டர் ஜி. பி. மலலசேகரா கண்டி போகம்பரைக் கைதிகள் மத்தியில் பேசுகையில் குறிப்பிட்டார்.

''எனது தாயார், நான் படிக்கும் காலத்தில் காலை ஐந்து மணிக்கே சாப்பாடு தயாரித்துவிடுவார். நான் பாடசாலைக்கு நடந்து சென்று படிப்பதற்காகவே இந்த ஏற்பாடு. சாதாரண உடைகளையே உடுத்தேன். ரஷ்யாவில் இருந்தபோதும் பிரிட்டனில் இருந்தபோதும் சரி இப்படியே வாழ்ந்தேன்'' என்று தன் வாழ்க்கையை எடுத்துக்கூறினர்

...தாகத் துப்புக்கிடைத்ததைத் தொடர்ந்து சுங்க அதிகாரிகள் அவரைச் சோதனை செய்து டாலர்களைக் கைப்பற்றியுள்ளனர். குற்றம் விதிக்குமுன் அவர் கடத்தியுள்ளதாகக் கருதப்படும் தங்கத்தையும் கண்டு பிடிப்பார்கள் எனத் தெரிகிறது.

## ஜூலை 6-ல் கையளிப்பு

கோட்டை, செவ்.

காலிமாவட்டத்தில் வன இலாகாவின் பாதுகாப்பிலிருந்த 25,000 ஏக்கர் காட்டுப் பகுதியை கைத்தொழில் கடற்ருெழில் அமைச்சர் திரு. பிலிப் குணவர்த்தன இலங்கை ஒட்டுப் பலகை கூட்டுஸ்தாபனத்திடம் ஜூலை மாதம் 6-ம் தேதி கையளிக்கவிருக்கிருர்.

ருமானிய நிபுணர் ஒருவரின் கருத்துக்கேற்பவே இக் காட்டுப் பகுதி ஜின் தோட்டையிலுள்ள ஒட்டுப் பலகை கைத் தொழிலுக்குத் தேவையான மரங்களை விநியோகிக்க கொடுக்கப்பட்டுள்ளது. இதுவரை காலமும் இத் தொழிற்சாலைக்கு வன இலாகாவே மரங்களைக் கொடுத்து வந்தது.

## நேபாளம் வாங்கும் கடன்

புதுடில்லி, ஜூலை 1

இந்த நிதிவருடத்தில் நேபாளத்துக்கு இந்தியா பதினைறரைக்கோடி ரூபாய் கடன் வழங்கவிருக்கிறது. நேபாளம் இந்தியாவிடமிருந்து பெறும் கடன் தவிர சீனவிடமிருந்து ஏழரைக் கோடி ரூபாயும் அமெரிக்காவிடமிருந்து ஆறரைக்கோடி ரூபாயும் ரஷ்யாவிடமிருந்து 45 லட்சம் ரூபாயும் இவ்வாண்டில் கடன்பெறுகிறது.

# மலசலகூட வாளிக்குள் குழந்தை; பெண் மயங்கிக் கிடந்தார்

## மந்திகை அரசினர் ஆஸ்பத்திரியில் சம்பவம்

புலோலி, செவ்வாய்

மலசல வாளிக்குள் குழந்தை பரிதாபக் கோலத்தில் கிடந்தது. மலசலகூடத்துக்குள் பெண்மணி மயங்கிய நிலையில் விழுந்துகிடந்தார்.

நெஞ்சையுருக்கும் இந்தச் சம்பவம் பருத்தித்துறை மந்திகை அரசினர் ஆஸ்பத்திரியில் நடந்தது.

பிரசவ வார்ட்டில் அனுமதிக்கப்பட்டிருந்த இந்தப் பெண்மணி மலசலம் கழிப்பதற்காகத் தனிமையாகச் சென்ருராம். உதவி ஆள் கோரியும், உதவி கிடைக்காததாலேயே இவர் தனியாகச் சென்றதாகக் கூறப்படுகிறது.

வார்ட்டில் குறிப்பிட்ட நோயாளியை அரை மணி நேரத்துக்கும் மேலாகக் காணததைத் தொடர்ந்து ஊழியர்கள் தேடியபோதே மலசல கூடத்துக்குள் பெண்ணையும், குழந்தையையும் பரிதாபக் கோலத்தில் கண்டனராம்.

வாளிக்குள்ளிருந்த குழந்தையையும், தாயையும் ஊழியர்கள் மீட்டுக்கொண்டனர்.

இச்சம்பவம் ஆஸ்பத்திரி மேலிடத்தின் கவனத்துக்குக் கொண்டுவரப்பட்டுள்ளது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஆசியபாதுகாப்புக்கு இராணுவ கூட்டமைப்புகள் வேண்டாம்

## இந்திய — இந்தோனேஷிய தலைவர்கள் கருத்து

ஜாகர்த்தா ஜூலை 1

ஆசியாவின் பாதுகாப்புக்கென இராணுவக் கூட்டமைப்புக்களில் சேர்ந்து கொள்வதையும் இராணுவ கூட்டுக்களை அமைப்பதையும் இந்தியாவும் இந்தோனேஷியாவும் நிராகரித்துள்ளன.

இந்தியப் பிரதமர் திருமதி இந்திராகாந்தியும் இந்தோனேஷிய அதிபர் ஜெனரல் சுஹார்ட்டோவும் நடத்திய பேச்சுவார்த்தைகளின்போது ஆசியப் பிராந்தியத்தின் பாதுகாப்புபற்றி ஆலோசனை செய்யப்பட்டதாகவும் ஆசியாவின் பாதுகாப்புக்கு இராணுவக் கூட்டுக்களில் சேர்வதையும் இராணுவக் கூட்டுக்களை அமைப்பதையும் இரு தலைவர்களும் நிராகரித்து விட்டதாகவும் அறியபபடுகிறது.

இரு தலைவர்களும் ஆசியாவின் பொருளாதார அபிவிருத்தியின் முக்கியத்துவத்தைப் பற்றி ஆலோசனை செய்ததாகவும் ஐ நா மூலம் பொருளாதார உதவி ஆசிய நாடுகளுக்குக் கிடைக்கவேண்டுமென்பதில் இருவரும் கருத்தொற்றுமை கொண்டிருந்ததாகவும்செய்திகள் தெரிவிக்கின்றன.

வியட்நாம் பிரச்னை மேற்கு ஆசிய நெருக்கடி ஆகியவைகள் பற்றியும்சீனு பற்றியும் இரு தலைவர்களும் பேசியதாகவும் கூறப்படுகிறது.

இந்திய அதிகாரிகளுக்கும்இந்தோனேஷிய அதிகாரிகளுக்குமிடையில் நடைபெற்ற பேச்சுவார்த்தைகளில் இந்தோனேஷியர்களுக்கு தொழில்நுட்பப் பயிற்சியளிப்பதற்கு இந்தியா முன்வந்ததாகத் தெரிகிறது.

## ஆர்ஜன்டைன தொழிற்சங்க தலைவர் சுட்டுக் கொலை

புவனஸ்அயர்ஸ், ஜூலை 1

ஆர்ஜென்டைனாவிலுள்ள சக்திவாய்ந்த தொழிற்சங்கமொன்றின் தலைவர்நேற்று அவரது காரியாலயத்தில் வைத்து நான்குபேரால்சுட்டுக்கொல்லப்பட்டார்.

அமெரிக்க அதிபர் நிக்ஸனின் விசேஷ பிரதி திரு நெல்சன் ருெக்பெல்லர் ஆர்ஜன்டைனுவுக்கு விஜயம் செய்வதை எதிர்த்து நடைபெற்ற கிளர்ச்சிஆர்ப்பாட்டங்கள் காரணமாக இதுவரை மூவர் உயிர் துறந்துள்ளனர்.

இதே சமயம் திரு ருெக்பெல்லர் நேற்று ஆர்ஜன்டைன அதிபருடன் பேச்சுவார்த்தை நடத்தினர்.

## "இஸ்ரேல் மீது ஆயுத தடைவிதிக்க வேண்டும்"

நியுயோர்க், ஜூலை 1

இஸ்ரேல் மீது ஆயுதத் தடைவிதிக்க வேண்டுமென்று ஜோர்டான், ஐ. நா. பாதுகாப்புச் சபையில் கேட்டுக்கொண்டது.

இஸ்ரேல்தான் பகை நடவடிக்கைகளில் ஈடுபடுவதாக உலகத்துக்கு எடுத்துக்காட்டுவதற்காகவே தான் ஜோர்டான் இப்படிக் கூறுவதாக இஸ்ரேல் பிரதிநிதி கூறினர்.

இதே சமயம் இஸ்ரேலிய ஆட்சிமன்றத்தில் இஸ்ரேலியப் பிரதமர் திருமதி கொல்டாமெயர் பேசுகை...

## சிஷ்ய பரம்பரை

யாழ்ப்பாணம், புதன்

நாவலர் மாநாட்டின் மூன்றுநாள் நிகழ்ச்சிகளையும் தொடக்கிவைக்கும் பெருமையை நாவலரின் சிஷ்ய பரம்பரையினருக்கே கொடுத்துக் கௌரவித்தது ஆறுமுக நாவலர் சபை.

முதலாம் நாள் விழாவை பண்டிதமணி சி. கணபதிப்பிள்ளை தொடக்கிவைத்தார்.

## இ. போ. ச. வுக்கு தனியமைச்சு வேண்டும்

கோட்டை, செவ்.

அகில இலங்கை பிரயாணிகள் சம்மேளனம் இலங்கை போக்குவரத்துசபை ஒரு தனிப்பட்ட அமைச்சின்கீழ் இயங்க வேண்டுமெனக் கோரியுள்ளனர்.

தேசியமய சேவைகள் அமைச்சு பல பொதுவேலைகளைக் கவனிக்க வேண்டியுள்ளதால் இ. போ. ச. வில் அதிக கவனம் செலுத்துவதற்கு நேரம் காணதென சம்மேளனம் தெரிவித்துள்ளது.

தனி அமைச்சொன்றை இ.போ ச வுக்கு அரசாங்கத்தினல் தற்பொழுது அமைக்க இயலாவிடில் அதை போக்குவரத்தமைச்சின்கீழ் இயங்கச் செய்யலாம் என சம்மேளனத்தின் காரியதரிசி திரு. ஏ. ஜேசுதாசன் தெரிவித்துள்ளார்.

## புங்குடுதீவிற்கு மின்சாரம்

அல்லைப்பிட்டி, திங்கள்

புங்குடுதீவுக் கிராம மக்களுக்கு அடுத்தவருட ஆரம்பத்தில் மின்சார வசதி கிடைக்கவிருக்கின்றது. முதலில் ஊர்காவற்றுறை, நாரந்தனை, வேலணை ஆகியஇடங்களுக்கு மின்சார வசதிகள் வழங்கப்பட்டு பின்னர் அம் மின்சாரம் புங்குடுதீவிற்கும் விஸ்தரிக்கப்படுமென்றும் தெரிகிறது. தற்போது ஊர்காவற்றுறை, நாரந்தனை, வேலணை ஆகிய இடங்களில் மின்சாரக் கம்பங்கள் நாட்டும்வேலைகள் நடைபெற்று வருகின்றன.

## புகார்

யாழ்ப்பாணம், புதன்

புங்குடுதீவு அரசினர் வைத்தியசாலையில் உள்ள தண்ணீர் இறைக்கும் இயந்திரம் பல மாதங்களாகப் பழுதடைந்த நிலையிலிருந்து வருகிறது. இதனைப் பகிரங்க வேலைப்பகுதியோ அல்லது சுகாதாரப் பகுதியோ விரைவில் திருத்தி, நோயாளிகளுக்கு உதவ முன்வரவில்லை என்று புகார்செய்யப்படுகிறது.

## அங்குரார்ப்பணம்

யாழ்ப்பாணம், புதன்

எழுத்தாளர்கள்

# பழைய நூல்களைப்படிக்காமல் இருப்பதுவும் தீண்டாமைதான்

## நாவலர் மாநாட்டில் சிங்காரவேலனர்

யாழ்ப்பாணம், புதன்

"சமுதாயத்தில் நிலவும் தீண்டாமையை ஒழித்தாக வேண்டும். சாதிப் பேயை விரட்டியடிப்பது மட்டும்தான் தீண்டாமை என்று நாம் நினைத்துவிடக்கூடாது. வாழ்வில் பல்வேறு துறைகளிலும் நாம் தீண்டத்தகாத செயல்களைச் செய்து வருகின்றோம். புதிய எழுத்தாளர்கள் பழைய நூல்களை படிக்காதது தீண்டாமை. பழைய எழுத்தாளர்கள் புதிய எழுத்தாளர்களைத் தட்டிக் கொடுக்காமல் புறக்கணிப்பதும்தீண்டாமையே. இவை யாவும் ஒழிக்கப்படல் வேண்டும்."

மேற்கண்டவாறு நாவலர் மகாநாட்டின் இரண்டாம் நாள் நிகழ்ச்சியில் சொற்பொழிவாற்றிய செஞ்சொற் கொண்டல் சிங்காரவேலனர் தெரிவித்தார்.

திரு. கா. பொ. இரத்தினம் தலைமையில் நடைபெற்ற இவ்வைபவத்தில் திரு. சிங்காரவேலனர் மேலும் பேசியதாவது:

தமிழ்நாட்டில் சமய உணர்ச்சி இல்லாமலிருக்கிறது. இந்த அவலநிலை போக்கப்படல் வேண்டும். ஈழத் தமிழகம் தாய்த்தமிழகத்துக்கு இந்த வழியில் உதவ வேண்டும் பழைய நெறியைப் பின்பற்றும் புதிய தமிழகம் இங்குதான் இருக்கிறது.

தமிழ்ப்படங்களால் எமது கலாச்சாரம் அழிகின்றது.

### பிறப்பால் தோன்றியது அல்ல

சாதி, கட்டுப்பாடு, இனம், குழு, என்பதெல்லாம் பிறப்பால் தோன்றியதல்ல. சமுதாயத்தால் தோன்றியவை. சாதி என்பது உடலோடு போய்விடும். ஒழுக்கம்தான் உயிரோடு வருவதாகும்.

பத்திரிகையாளர்களும் தமிழ் நடையில் பேச்சுக்கும் எழுத்துக்குமிடையில் வேறுபாடு காட்டக்கூடாது. அதுதான் நாவலரின் விருப்பமாகும். அவரது இலட்சியக் கனவு நனவாக நாவலர் தமிழ்ச் சர்வகலாசாலை என்ற பெயரில் உயர்கல்லூரி ஒன்று நிறுவப்பட வேண்டியது அவசியம் என்றும் குறிப்பிட்டார்.

# சைவ மக்களாலேயே சைவத்துக்கு ஆபத்து

திரு. ச. சிவகுமார் எம் ஏ. பேசுகையில் தெரிவித்ததாவது-

தமிழ்நாட்டுக்கும் ஈழத்துக்கும் அருட் தொண்டாற்றியவர் நாவலர். நாவலர் பெருமான் விழாவும் ஈழத்துக்கும் தமிழகத்துக்கும் ஒரு பாலம் அமைக்கின்றது.

நாவலர் வாழ்ந்த காலமும் சூழ்நிலையும் இப்போதுள்ள சூழ்நிலைக்குமிடையில் அதிக வித்தியாசம் உண்டு. பிறசமயத்தவர்களால் தமிழுக்கும் சைவத்துக்கும் ஏற்பட்ட ஆபத்தை நாவலர் தக்க சமயத்தில் தோன்றி நீக்கினர். ஆனல் இன்று சைவமக்களாலேயே சைவத்துக்கு ஆபத்தாகும்.

வேறு சமயிகள் சைவத்தைப் புறக்கணிப்பதற்கு நாம் கவலைப்படத் தேவையில்லை. நமக்குள்ளே இருக்கும் சமய நம்பிக்கை அற்ற

### தாய்ப்பாலும் எருமைப்பாலும்

தாய்ப்பால் குடித்து வளர்ந்தால்தான் தாய் அன்புஏற்படும். குலப்பண்பு வளரும் புட்டிப்பால் கொடுத்து வளர்த்தால் தனதுசம்பளத்தை தாயிடம்தான்கொடுக்கவேண்டும் என்ற உணர்வு பிள்ளைக்கு ஏற்படுமா? எருமைப்பால் குடித்தால் எருமைக்குணம்தான் ஏற்படும் இதை இன்றைய தாய்மார்கள் உணரவேண்டும்.

தமிழர்களுக்குள் ஒற்றுமை குறைவு என்று சொல்கிறார்கள். அதுவல்ல காரணம். தமிழர்களுக்கு அறிவுகூடவாதலால் எதற்கும் கருத்து வேறுபாடு. சகலதுக்கும் தர்க்கம்தான்.

...மிழில் 18 ஆயிரத்து 379 பாடல்கள் உண்டு. ஒரு நாளைக்கு 5 பாடல்கள் வீதம் பாராயணம்செய்து பூஜை

## நாவலர் மாநாடு இன்றைய நிகழ்ச்சிகள்

மாலை 4-00 மணிமுதல்: கலைவிழா,

தொடக்கி வைப்பவர்: திரு. எஸ். பரம் தில்லைராஜா.

தலைவர்! திரு. க. தனபாலசிங்கம் (உள்நாட்டிறைவரி வடமாநில அதிகாரி)

வரவேற்புரை: 4-00—4-10 திரு. ஆ. தேவராசன்.

தொடக்கவுரை: 4-10-4 20 தலைமையுரை: 4-20 — 4-30, பி. ப. 4-30—5 30 நாதஸ்வர இசை: திரு. எம். பஞ்சாபிகேசன், மாலை 5-30 — 6-00 பக்திப்பாடல், வேம்படி மகளிர் கல்லூரி, மாலை 6-00—7-00 பண்ணிசை: திரு. வி. கே. நடராஜா கோஷ்டியினர், இரவு 7-00—9-00 கல்லூரி மாணவிகளின் நடனங்கள்: கொக்குவில் கலாபவனம். பாரதி கலாமன்றம், இராமநாதன் கல்லூரி, வேம்படி மகளிர் கல்லூரி. இரவு 9-00 — 10-00 பண்ணிசை திரு. பி. ஏ. இராஜசேகரன். இரவு10-00 —11-00 நாதஸ்வரம் திரு. பி. எஸ். ஆறுமுகம்பிள்ளை, இரவு 11-00—12-30நாதஸ்வரம் திரு. என். கே. பத்மநாதன், திரு. ஏ. பாலகிருஷ்ணன். நன்றியுரை: திரு. பொ. தேவதாசன்.

## 3 எதிரிகள் குற்றவாளிகள் ஒருவர் விடுதலை

வல்வெட்டித்துறை, செவ்.

துன்னலை தெற்கைச் சேர்ந்த வள்ளிக்குட்டி, கிட்டிணன், கந்தசாமி, மணியம் ஆகிய நால்வரும் அதே இடத்தைச் சேர்ந்த கணபதி இரத்தினம் என்பவருக்கு கடந்த வருடம் மார்கழி மாதம் 8-ந் திகதி கம்பியாலும், கொட்டனலும் அடித்துக் காயம் உண்டுபண்ணியதாக பொலிசாரால் குற்றம் சாட்டித் தொடரப்பட்ட வழக்கு பருத்தித்துறை மாஜிஸ்டிரேட் திரு. கே. விக்னராசா முன்னிலையில் விசாரணைக்கு எடுத்துக்கொள்ளப்பட்டது.

விசாரணையின் பின்னர்

## 'நாவலர் லட்சியங்களை நிறைவேற்றுவோம்'

யாழ்ப்பாணம், புதன்

"தமிழும் சைவமும் இந்த நாட்டில் தழைத்திடவும், தமிழர்களாகிய நாம் தலை நிமிர்ந்து வாழ்ந்திடவும் வித்திட்டவர் நாவலர் பெருமான். நாவலர் பெருமான் தோன்ற வேண்டிய நேரத்தில் தோன்றியிராவிட்டால் தமிழர்களும், சைவர்களும் எந்த நிலையில் வாழுவார்கள் என்று கற்பனைகூடப்பண்ணிப் பார்க்க முடியாது."

நாவலர் மாநாட்டின் மூன்றும் நாளான நேற்றைய காலை நிகழ்ச்சிகளுக்குத் தலைமை தாங்கிப் பேசுகையில் யாழ். மாவட்ட உதவி அரசாங்க அதிபர் திரு. ரி. முருகேசம்பிள்ளை இவ்வாறு தெரிவித்தார்.

ஆயிரக்கணக்கான கல்லூரி மாணவர்களும், மாணவிகளும் நேற்றைய காலை விழாவுக்குச்சமுகம் கொடுத்திருந்தனர்.

திரு. முருகேசம்பிள்ளை தமது தலைமையுரையில் தமிழர்களும் சைவர்களும் என்றும் நாவலர்இலட்சியங்களை நிறைவேற்றவேண்டும் என்றும், அவர் விட்டுச் சென்ற பாதையைத் தொடரவேண்டும் என்று சொன்னர்.

யாழ். மாநகரசபைபொறியியல் நிபுணர் திரு. வைத்தியலிங்கம் வரவேற்புரை நிகழ்த்துகையில் தெரிவித்ததாவது:

சாதாரண மக்கள் வாழ்க்கைச் சூழலில் சிக்கிவிடுகின்றார்கள். ஆனல் சூழலுக்கு ஏற்ப மாறி வாழப்பழக வேண்டும். அப்படி வாழப் பிறப்பவர்கள் ஆயிரத்தில் ஒருவரே. தான் இருந்த சூழலை மதித்து சைவமக்களை இருள் சூழ்ந்த நிலையிலிருந்து ஒளி சூழ்ந்த நிலைக்குக் கொண்டுவந்தவர், அதற்காகப் பாடுபட்டவர் நாவலர் பெருமானேதான்.

சமயங்கள் வாழ்க்கையின் நெறியை வகுத்துக் கூறின. புறம், அகம், அறிவு, இன்பம் ஆகியவற்றை வரையறுத்துக் கூறுவது சமயமே. நாம் புறச் சடங்குகளை மட்டுமே கைக்கொள்கிறோம். சமயத்தின் முக்கிய பங்கு அகத்தைத் திருத்துவதே. அதற்கு தர்மம், ஒழுக்கம், சீலம் அவசியம். அதனல் ஞானமும், அறிவும், வளரும்.

நமது சைவசமயத்தை வளர்க்கும் குருமார்கள் புறம், அகம், அறிவு, இன்பம். உள்ளவர்களா? அதற்கேற்ப சூழ்நிலையில் வாழ்கின்றார்களா என்று நாம் எண்ணவேண்டும். விஞ்ஞானம் மனிதனின் நேரத்தையும் காலத்தையும் சுருக்கி விட்டது. இதுஉலக மக்களிடையே வெகுவிரைவில் ஒருமைப்பாட்டை ஏற்படுத்தும்.

நாவலர் தனது வாழ்வில் பெரும் புரட்சி செய்தவர். சிதம்பரத்திலிருந்தபோது அங்குதீட்சிதர்களிடமிருந்து இவர் திருநீறு வாங்க மறுத்தார். அந்தத் தீட்சிதர்கள் சைவத் தீட்சை பெருததும், முறையாகக் கடமை செய்யாததும்தான் இதற்குக் காரணம் என்று அவர் வாதாடினர்.

இந்த வேளையிலே பின்வரும் வேண்டுகோள்களை நாவலர் சபைக்கு நான் விடுக்க விரும்புகின்றேன்.

0 நாவலர் தொண்டர்களை உலகெங்கும் அனுப்ப வேண்டும்.

பிராமணர்கள்தான் பூஜை செய்யவேண்டும் என்ற நிலையை மாற்ற வேண்டும்.

வித்வான் ந. சுப்பையா பிள்ளை தொடக்கவுரை நிகழ்த்துகையில் எமது வாழ்நாள் என்றும் நாவலர் சிலை எமக்குத் துணைநிற்குமென்றும், நாவலர் சிலையைப் பார்க்கும்போதெல்லாம் அவர்போல வாழவேண்டுமென்ற உணர்வு எமக்கு ஏற்படுமென்றும் சொன்னர். (கா. நி)

## கரம்பன் இளைஞர் மன்றம்

யாழ்ப்பாணம், செவ்.

கரம்பன் இளைஞர்களால் கரம்பன் இளைஞர் மன்றம் என்ற புதியமன்றம் ஆரம்பிக்கப்பட்டுள்ளது. புதிய நிர்வாகிகள் தெரிவில் தலைவராக திரு. த. நாகலிங்கமும், செயலாளராக திரு. தா. சிவானந்தசோதியும், பொருளாளராக திரு. த. சிவநாதனும் ஏகமனதாகத் தெரிவுசெய்யப்பட்டனர்.

இவர்களுக்கு உதவியாளர்களாக மூவர் தெரிவு செய்யப்பட்டனர். 11 பேர் கொண்ட செயற்குழு ஒன்றும்தெரிவுசெய்யப்பட்டது.

## உபசரணை

அல்லைப்பிட்டி, செவ்.

யாழ்ப்பாணம் உதவிமேற்றிராணியார் வண. பிதா எல். ஆர். அன்ரன் ஊர்காவற்றுறை புனித அந்தோனியார் கல்லூரிக்கு விஜயம் செய்தபோது மேற்படி கல்லூரி மாணவ, ஆசிரியர்களினல் அவருக்கு வரவேற்புபசரணை அளிக்கப்பட்டது. அன்றிரவு அவருக்கு கல்

## மாரடைப்புத்தான் காரணம்

Digitized by Noolaham Foundation. noolaham.org | aavanaham.org

வடிக்கைகளில் ஈடுபடுவதாக உலகத்துக்கு எடுத்துக்காட்டுவதற்காகவே தான் ஜோர்டான் இப்படிக் கூறுவதாக இஸ்ரேல் பிரதிநிதி கூறினார்.

இதே சமயம் இஸ்ரேலிய ஆட்சிமன்றத்தில் இஸ்ரேலியப் பிரதமர் திருமதி கோல்டாமெயர் பேசுகையில் எகிப்தினதும் ஜோர்டானினதும் தாக்குதல் நடவடிக்கைகள், அந்நாடுகளுடனான சண்டை நிறுத்த உடன்பாட்டை இல்லாமல் செய்துவிட்டதென்றார். இஸ்ரேல் திருப்பித்தாக்கினால் ஆச்சரியப்பட வேண்டியதில்லையென்றார்.

---

## ராடார் சாதனம்

ஹைதராபாத், ஜூலை 1

முழுக்க முழுக்க இந்தியாவிலே செய்யப்பட்ட, புயல் வருவதை முன்கூட்டி அறிந்து தகவல்கொடுக்கக்கூடிய ராடார் சாதனம் ஒன்று பீகம் பாக்கம் விமான நிலையத்தில் பொருத்தப்பட்டுள்ளது.

---

கோலாலம்பூரில்

## ஒருநாளில் 10 பேர் பலி

கோலாலம்பூர், ஜூலை 1

மலேஷியத் தலைநகரான கோலாலம்பூரில் சென்ற ஞாயிற்றுக்கிழமை நடைபெற்ற தீ வைப்பு, கைகலப்பு சம்பவங்களினால் ஒருவர் கொல்லப்பட்டார். சென்ற சனிக்கிழமையும் ஞாயிற்றுக்கிழமையும் நடந்த இனக்கலகங்களில் ஐவர் மாண்டதாக உத்தியோகபூர்வமான தகவல்கள் தெரிவித்தன. ஆனால் பத்துப் பேர் மாண்டதாக உத்தியோகப் பற்றற்ற செய்திகள் கூறுகின்றன.

இந்தியர்கள் பெரும்பான்மையாக வாழும் பகுதிகளில் கலகம் நிகழ்ந்துள்ளதால் இந்தியர்கள் வெகுவாகப் பாதிக்கப்பட்டுள்ளனர். நிலைமை இப்போது கட்டுக்கடங்கியிருப்பினும் அமைதியற்ற எந்நேரமும் எதுவும் நடக்கலாம் என்ற அச்சத்துடனேயே மக்கள் வாழ்கின்றனர்.

---

## மழைக்கு 50 பேர் பலி

டோக்கியோ, ஜூலை 1

மேற்கு ஜப்பானில் பெய்த கடும்மழைக்கு இதுவரை 50 பேர் பலியாகியுள்ளனர். 80 பேர் காயமடைந்துள்ளனர்.

பெருமையை நாவலரின் சிஷ்ய பரம்பரையினருக்கே கொடுத்துக் கௌரவித்தது ஆறுமுக நாவலர் சபை.

முதலாம் நாள் விழாவை பண்டிதமணி சி. கணபதிப்பிள்ளை தொடக்கிவைத்தார்.

இரண்டாம் நாள் விழாவை புலவர்மணி ஏ. பெரியதம்பிப்பிள்ளை தொடக்கிவைத்தார்.

மூன்றாம் நாள் விழாவை வித்துவான். ந. சுப்பையாபிள்ளை தொடக்கிவைத்தார்.

(கா. நி.(

## தூத்துக்குடி துறைமுகம்

சென்னை, ஜூலை 1

திட்டக் கமிஷன் உறுப்பினர் ஆர். வெங்கட்ராமன், அரச செயலகத்தில் கூட்டுறவு மந்திரி சி. பா. ஆதித்தனையும், தமிழ்நாடு அரசாங்கத்தின் அதிகாரிகளையும் சந்தித்து, தூத்துக்குடி துறைமுகத் திட்டம் பற்றி பேசினார்.

---

## இந்து மகாசபை எதிர்ப்பு

புதுடில்லி, ஜூலை 1

ஆந்திராவில் உடனடியாக ராஷ்டிரபதி ஆட்சி பிரகடனப்படுத்தவேண்டுமென்று அகில இந்திய இந்து மகாசபைச் செயற்குழு கேட்டுள்ளது. தெலிங்கானா தனி ராஜ்யக் கோரிக்கைக்கு அது எதிர்ப்புத் தெரிவித்தது.

---

## 19 மந்திரிகள்

பாட்னா, ஜூலை 1

பீஹார் மந்திரிசபையில் மேலும் இருவர் நேற்றுச் சேர்த்துக் கொள்ளப்பட்டனர். இவர்களுடன் புதிய கூட்டணி மந்திரிசபையில் 19 பேர் அங்கம் வகிக்கின்றனர்.

---

## தினேஷ்சிங் அமெரிக்கா செல்கிறார்

புதுடில்லி, ஜூலை 1

இந்திய வெளிவிவகார அமைச்சர் திரு. தினேஷ் சிங் இம்மாதம் 9ந் திகதி அமெரிக்கா செல்கிறார். அங்கு ஒரு வாரம் தங்கியிருப்பார். அமெரிக்க வெளிவிவகார அமைச்சரின் அழைப்பின்மீது செல்லும் திரு. தினேஷ் சிங்குடன் வெளிவிவகார அமைச்சு அதிகாரிகள் சிலரும் செல்கின்றனர்.

ரங்க வேலைப்பகுதியோ அல்லது சுகாதாரப் பகுதியோ விரைவில் திருத்தி, நோயாளிகளுக்கு உதவ முன்வரவில்லை என்று புகார்செய்யப்படுகிறது.

---

## அங்குரார்ப்பணம்

யாழ்ப்பாணம், புதன்

யாழ். காரியாதிகாரிப் பிரிவு சனசமூக நிலையங்களின் சபாஜ் அங்குரார்ப்பணக் கூட்டம் யாழ். மத்திய கல்லூரி மண்டபத்தில் திரு. வே. சுப்பையா தலைமையில் நடைபெற்றது.

சுமார் சனசமூக நிலையங்கள் கலந்துகொண்ட இக் கூட்டத்தில் பார்வையாளராகத் திரு. ஏ. ஏ. யோசேப்பு கலந்துகொண்டார்,

உத்தியோகத்தர்களாகத் தெரிவு செய்யப்பட்டோர் வருமாறு:-

தலைவர். திரு. ஆ. மார்ட்டீன் உபதலைவர்கள் எஸ். இராசையா க. த. இராஜா. செயலாளர் எஸ். வரதராஜா. உப-செயலாலர் சு. ஆறுமுகம் தனாதிகாரி. திரு. சி. பொ. வேலாயுதபிள்ளை உறுப்பினர்களாகத் திரு. எம். ஜி. தில்லைநாயகம், திரு. ஏ. யோண் திரு. ஏ. ஜே. அண்டர்சன், திரு. எம். சின்னராஜா, திரு. எஸ். துரை ஆகியோரும் ஏகமனதாகத் தெரிவு செய்யப்பட்டனர்.

---

## பெற்றோர் ஆசிரிய சங்க கூட்டம்

யாழ்ப்பாணம், புதன்

நாகர்கோவில் மகாவித்தியாலய பெற்றோர் ஆசிரியர் சங்க நிர்வாக சபைக் கூட்டம் வித்தியாலய மண்டபத்தில் அதிபர் திரு. ம. கந்தையா தலைமையில் நடைபெற்றது.

இக் கூட்டத்தில் நிர்வாக சபை அங்கத்தவர்களும், பெற்றோர்களும் கலந்துகொண்டனர். பின்வரும் தீர்மானமும் நிறைவேற்றப்பட்டது.

ஆறும் வகுப்பு மாணவர்கள் தொடக்கம் பத்தாம் வகுப்பு மாணவர்கள் வரை வசதி சேவைப்பணம் வசூலிக்கப் படவேண்டும்.

......

## மகா ஞான ஒடுக்கம்

பருத்தித்துறை, செவ்.

வதிரி அர்ச். அந்தோனியார் ஆலய மகாஞான ஒடுக்கம் அடுத்தமாதம் 5-ந்திகதி தொடக்கம் 13-ம் திகதி வரை நடைபெறுமெனப் பங்குக்குரவர் பிதா ஏ. எஸ் சிங்கராயர் தெரிவிக்கிறார்.

கும் ஏற்பட்ட ஆபத்தைத் நாவலர் தக்க சமயத்தில் தோன்றி நீக்கினார். ஆனால் இன்று சைவமக்களாலேயே சைவத்துக்கு ஆபத்தாகும்.

வேறு சமயிகள் சைவத்தைப் புறக்கணிப்பதற்கு நாம் கவலைப்படத் தேவையில்லை. நமக்குள்ளே இருக்கும் சமய நம்பிக்கை அற்றவர்களை அப்படியே விட்டுவிட்டால் புற்றுநோய் போல இது புரையோடி எதிர்காலத்தைச் சிதறடிக்கச் செய்துவிடும்.

இன்று உலகில் தமிழர்களிடையே ஒற்றுமைக் குறைவுதான் காணப்படுகின்றது. உதாரணமாக ஒன்று சொல்லலாம். நான் இந்தோனேஷியாவுக்குச் சொற்பொழிவாற்றச் சென்றிருந்தேன். அங்குள்ள சுமார் 1500 தமிழர்களும் வந்திருந்தார்கள். அவர்கள் கடந்த 7 வருடங்களாக எந்தத் தமிழ்ச் சொல்லையும் கேட்கவில்லையாம். ஆனால் அவர்கள் தமிழ் பேசுகின்றார்கள்.

குறைவு என்று சொல்கிறார்கள். அதுவல்ல காரணம். தமிழர்களுக்கு அறிவுகூடவாதலால் எதற்கும் கருத்து வேறுபாடு. சகலதுக்கும் தர்க்கம்தான்.

தமிழில் 18 ஆயிரத்து 379 பாடல்கள் உண்டு. ஒரு நாளைக்கு 5 பாடல்கள் வீதம் பாராயணம்செய்து பூஜை செய்யவேண்டும். பத்து வருடத்தில் சகல பாடல்களும் பாராயணம் செய்யப்பட்டுவிடும். இதை நாவலர் நூற்றாண்டில் ஒரு மகிமையாக ஒவ்வொருவரும் கொள்ளலாம்.

இன்றிலிருந்து நாவலர் தொண்டுகளுக்குச் செய்யும் கைங்கரியமாக கள், சிகரட் போன்றவைகளைப் பாவிப்பதைக்கைவிட்டு மாமிசம் புசிக்காதவர்களாக ஒவ்வொருவரும் மாறவேண்டும் என்றும் இவர் கேட்டுக்கொண்டார்.

# பாலபாடங்கள் தமிழரின் அரும் பெரும் பொக்கிஷம்

திருவாவடுதுறை மகா வித்துவான் தண்டபாணி தேசிகர் பேசுகையில் குறிப்பிட்டதாவது: நாவலருக்குத் தமிழும் சைவமும்தான் உயிர்நாடி. இவை பிரியமுடியாதவை, பிரிக்கவும் முடியாது.

தமிழையும் சைவத்தையும் வேறுபடுத்தமுடியாது. சைவம் இறந்தால் தமிழும் இறந்துவிடும். நாவலர் தமிழ் வளர்த்ததால் சைவமும் வளர்ந்தது என்பது இங்கு குறிப்பிடப்படவேண்டியதாகும்.

நாவலர் சமயம்காக்கவந்தவர். அதற்கு உயிரோட்டமாகஇருந்தது சமயக்கல்வியும் சமய உணர்வுமே. சமய உணர்ச்சியை தமிழ் மூலம் மக்களிடம் புகுத்தி அதில் வெற்றியும் கண்டவர் நாவலரே.

அன்பின் மகத்தான தத்துவத்தையும், முத்திப் பேறையும் பாலபாடங்கள் நன்கு விளக்குவன. இவை தமிழின் அரும்பெரும் பொக்கிஷங்களாகும்.

தமிழில் பண்ணிசைகள் பாடல்வேண்டும். அந்தத் தமிழின் இனிமையில் இறைவன் அருள் உருதென்படும்.

திரு. ஐ. தி. சம்பந்தன் நன்றி தெரிவித்துப்பேசினார்.

(கா. நி.)

## அமெரிக்க பெண் பூநகரிக்கு விஜயம்

பூநகரி, செவ்வாய்

அமெரிக்காவில் இருந்து இளைஞர் விவசாயக் கழகத்தின் சார்பில் இலங்கை விஜயம் செய்துள்ள அமெரிக்க இளம் பெண்மணி செல்வி ஜெனத் (19 வயது) பூநகரிக்கு விஜயம் செய்து இங்குள்ள மூன்று விவசாயக்கழக உறுப்பினர்களுடன் கலந்துரையாற்றினார். இவருடன் யாழ் மாவட்ட தலைமைக் காரியாலய விவசாய அதிபர் திரு. தவராசவேல் வந்திருந்தார்.

......

## புனித பேதுரு-பாவிலு ஆலய உற்சவம்

யாழ்ப்பாணம், புதன்

நவாலி புனித பேதுரு-பாவிலு ஆலய வருடாந்த உற்சவம் இவ்வருடம் கோவில் கிறிஸ்தவர்களால் கொண்டாடப்பட்டது. நவநாள் ஆராதனைகளின் பின் திவ்ய பூசைப்பலியும் தொடர்ந்து திருச்சுரூப ஊர்வலமும் நடைபெற்றது. பங்கு கிறிஸ்தவர்களுக்கு ஞானவொடுக்கம் வணக்கத்துக்குரிய பிதாகுலால் அடிகளாரால் நிகழ்த்தப்பட்டது. மாலை பொருட்காட்சியும், கதம்ப நிகழ்ச்சியும் கட்டளைக்குரவர் வண. பிதா. மேரியோசப் தலைமையில் நிறைவேறின.

லும் அடிக்குக் காயம் உண்டுபண்ணியதாக பொலிசாரால் குற்றம் சாட்டித் தொடரப்பட்ட வழக்கு பருத்தித்துறை மாஜிஸ்டிரேட் திரு. கே. விக்னராசா முன்னிலையில் விசாரணைக்கு எடுத்துக்கொள்ளப்பட்டது.

விசாரணையின் பின்னர் மாஜிஸ்டிரேட் 3-ம் எதிரியான கந்தசாமியை விடுதலை செய்து 1-ம், 2-ம், 4-ம் எதிரிகளை குற்றவாளியாகக் கண்டு 1-ம் எதிரியான வள்ளிக்குட்டியை றிமாண்டில் வைக்கும்படியும், 2-ம், 4-ம் எதிரிகளை முந்திய பிணையில் செல்லுமாறு உத்தரவிட்டு தீர்ப்புக் கூறுவதை இம்மாதம் 5-ந் திகதிக்கு ஒத்திவைத்துள்ளார். புறக்டர் வி. பி. சுந்தரலிங்கம் பொலிசாருக்கு உதவியாக ஆஜரானார்.

......

## சொற்பொழிவு

யாழ்ப்பாணம், புதன்

'குருக்கோமா' என்றகண்ணைக் குருடாக்கும் வியாதி பற்றி டாக்டர் எஸ். ஆனந்தராஜன் இம்மாதம் 7-ந் திகதி நல்லூர் நெசவு ஆசிரிய பயிற்சிக் கலாசாலையில் சொற்பொழிவு நிகழ்த்துவார்.

(கா. நி.)

யாழ்ப்பாணம் உதவிமேற்றிராணியார் வண. பிதா எல். ஆர். அன்ரன் ஊர்காவற்றுறை புனித அந்தோனியார் கல்லூரிக்கு விஜயம் செய்தபோது மேற்படி கல்லூரி மாணவ, ஆசிரியர்களினால் அவருக்கு வரவேற்புபசரணை அளிக்கப்பட்டது. அன்றிரவு அவருக்கு கல்லூரி ஆசிரியர்கள் இரவு விருந்துபசாரம் அளித்தனர்.

---

## விவசாய நிபுணர் குழு

கோட்டை, செவ்வாய்

விவசாயத்துறையில் அரசாங்கத்துக்கு ஆலோசனை கூறுவதற்காக இந்தியாவிலிருந்து விவசாய நிபுணர்கள் குழுவொன்று இங்குவந்துள்ளது.

கடந்த வருடம் பிரதமர் டட்லி சேனநாயக்கா இந்தியாவுக்கு விஜயஞ் செய்திருந்தபொழுது இந்நிபுணர்கள் வருகைக்கான ஒழுங்குகளைச் செய்திருந்தார். மூன்று வாரங்களுக்கு இங்கு தங்கியிருக்கும் இந்த விவசாய நிபுணர்கள் உணவு விவசாய அமைச்சின் அதிகாரிகளோடு விவசாய சம்பந்தமான பேச்சுவார்த்தைகளில் ஈடுபடுவார்களெனத் தெரிகிறது.

றும், நாவலர் சிலையைப் பார்க்கும்போதெல்லாம் அவர்போல வாழவேண்டுமென்ற உணர்வு எமக்கு ஏற்படுமென்றும் சொன்னார்.

(கா. நி)

---

## மாரடைப்புத்தான் காரணம்

அல்ஜியர்ஸ், ஜூலை 1

அல்ஜியர்ஸ் சிறையில் மாண்டமுன்னாள் கொங்கோ பிரதமர் மொயிஸ்ஷோம்பேயின் உடல் பிரேத பரிசோதனை செய்யப்பட்டபின் மாரடைப்பினால்தான் அவருக்கு மரணம் ஏற்பட்டதென்பது ஊர்ஜிதம் செய்யப்பட்டது. பாரிசிலிருந்து வந்த ஒரு டாக்டர் மரண விசாரணை நடத்தினார்.

---

## கோரிக்கை

அல்லைப்பிட்டி, செவ்.

நெடுந்தீவு மேற்கிலுள்ள மகேஸ்வரி வித்தியாசாலைக் கட்டடம் பல வருடங்களாகப் பழுதடைந்த நிலையில் இருக்கின்றதென்றும் இப் பாடசாலைக் கட்டடத்தை உடனடியாகத் திருத்தி ஆவனசெய்யுமாறும் நெடுந்தீவு மேற்குப்பகுதி மக்கள் தீவுப்பகுதி எம். பி. திரு. வ. நவரத்தினத்திடம் கேட்டுக்கொண்டுள்ளனர்.

# நாவலர் கையாண்ட இரு கருவிகள்

## கலாநிதி வித்தியானந்தன் விளக்கம்

யாழ்ப்பாணம், புதன்

நாவலர் பணிகளுக்கு அடிப்படையாக அமைந்தது அவரின் சமய உணர்வா? சமுதாய நோக்கமா என்ற தலைப்பின்மீது நடைபெற்ற பட்டிமன்றத்துக்கு கலாநிதி சு. வித்தியானந்தன் தலைமை வகித்துப் பேசுகையில் சொன்னதாவது:-

நாவலர் தமது பணிகளைச் செவ்வனே செய்வதற்கு இரு கருவிகளைக் கையாண்டார். ஒன்று பிரசங்கம்; மற்றது அச்சகம். அச்சக மூலம் தமது பணிகளுக்குத் தேவையான நூல்களையும் கட்டுரைகளையும் துண்டுப் பிரசுரங்களையும் வெளியிட்டார். ஆனால் அச்சகவெளியீடுகளிலும் பார்க்க, சொல்லாட்சியைக்கொண்ட பிரசங்கங்களே பெரிதும் பயனளிக்கவல்லன. எழுத்துப் படைப்புக்களைப் பலர் படிப்பது குறைவு. ஆனால் பிரசங்கங்களுக்கு ஏராளமான மக்கள் வருகின்றனர். பெரும்பாலான மக்களுக்கு ஒன்றினை விளக்குவதற்கு நல்ல பிரசங்கம் எழுதவும் வலுவுடையது. மற்றவர்களுடைய கொள்கைகளைக் காரசாரமாகத் தாக்கிமறுப்பதற்கும், தமது கோட்பாடுகளை நிலைநாட்டுவதற்கும் சொற்போர் சிறந்த வாயிலாக அமைகின்றது. நாவலர் தம்முடைய நாவின் வல்லமைகொண்டு பிறமதம் சாடியும் தம்மதம் நிறுவியும்வந்தார். தம்மை எதிர்த்தோரை நேரேசொற்போருக்குஅழைத்தபோதும்நாவலருடன்ஒரேமேடையில்அவர்கள் சொற்போர்தொடுக்கப் பின்வாங்கினர். அல்லாது விட்டால், நாவலர் காலத்தில் எத்தனையோ பட்டிமன்றங்கள் இடம்பெற்றிருக்கும்.

பட்டிமண்டபம் என்ற சொல் முதன்முதலாக மணிமேகலையில் வருகின்றது. 'பட்டிமண்டபம் பாங்கறிந்து ஏறுமின்' என்று கூறுகின்றது அந்நூல். அக்காலத்திலே பொதுவாக அமைக்கப்பட்ட மன்றங்களின் சமயவாதிகள் தத்தம் சமய உயர்வுபற்றிச் சொற்போர் நிகழ்த்தினர் எனத் தெரிகின்றது. இன்று இப்படி மன்றம் சமய வாதிகளால் நடத்தப்பெறவில்லை. யாவரும் ஒரே சமயத்தவர், நாவலர் பணிபற்றிச் சொல்விருந்து உங்களுக்களிக்க வந்திருக்கின்றனர்.

'சமய உணர்வு' என்ற தலைப்பில் திரு. அ. சண்முகதாஸ், பண்டிதை தங்கம்மா அப்பாக்குட்டி, வித்துவான் க. சொக்கலிங்கம் ஆகியோரும், 'சமுதாய நோக்கம்' என்ற தலைப்பில் வித்துவான் சி. ஆறுமுகம், பண்டிதை கங்கேஸ்வரி கந்தையா, திரு. க. சிவராமலிங்கம் ஆகியோரும் பேசினார்கள்.

கலாநிதி வித்தியானந்தன் முடிவுரை நிகழ்த்துகையில் நாவலர் விழாவில் சமய உயிர் என்றும், சமுதாயம் உடல் என்றும் குறிப்பிட்டார்.

(கா. நி.)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**மணிவாக்கு**

'தீமையை வெல்ல வேண்டுமானுல் அதற்கு வெளியே நிற்கவேண்டும். ஆதாவது கலப்பட மற்ற நன்மையின் உறுதி மிக்க நிலத்தில் நிற்க வேண்டும்.

—மகாத்மா காந்தி

ஈழநாடு
Eelanadu National Tamil Daily
Telegram: "EELANADU" Jaffna.
Post Box: 49, Jaffna. Telephone: 389

யாழ்ப்பாணம், சௌமிய வருஷம் ஆடி மாதம் 18 ந் திகதி (2-7-69)

## சம்பள உயர்வு

அரசாங்க ஊழியரின் சம்பள விகிதம் தரம் பற்றி ஆராய்ந்த திரு. எல். பி. டி. சில்வா தலைமையிலான விசாரணைக்குழு தனது இடைக் கால அறிக்கையை சமர்ப்பித்துவிட்டது. அரசாங்க ஊழியர் ஆவலுடன் எதிர்பார்த்திருந்த அறிக்கையில் குழு என்னென்ன சிபார்சுகளைச் செய்திருக்கிறதென்ற முழு விபரமும் இன்னும் தெரியவில்லை. ஆனுலும் குழுவின் தலைவர் தெரிவித்துள்ள தகவலின்படி அரசாங்க ஊழியர்களுக்கு அவர்களின் மொத்த சம்பளத்தை அடிப்படையாக வைத்து பலதரப்பட்ட சம்பளஉயர்வுகளை அவர்களுக்கு அளிப்பதற்கு சிபார்சு செய்திருக்கிறதென்று தெரிகிறது. குறைந்த சம்பளம் பெறும் அரசாங்க ஊழியர்கள் அதிகமான சம்பள உயர்வைப் பெறுவார்களென்றும் இதர அரசாங்கஊழியர்களுக்கும் சம்பள உயர்வு கிடைக்கவிருக்கிறது. இதுதவிர அவர்களுக்கு 'அலவன்ஸ்களும்' கிடைக்கும். அரசாங்க ஊழியர்களுக்குத் திருப்தியளிக்கக் கூடிய முறையில் சம்பளக் குழுவின் சிபார்சுகள்இருக்குமென நிச்சயமாக நம்பலாம். அரசாங்க ஊழியர் குறையின்றி திருப்தியாக வாழ்ந்தால்தான் அரசாங்க நிர்வாகம் சீராக இயங்க முடியும். அரசாங்கத்துக்கும் அவர்கள் விசுவாசமாக இருந்து அரசாங்கத்தின் கொள்கைகளையும் திட்டங்களையும் சரியானமுறையில் செயல்படுத்துவார்கள். இதைஉணர்ந்தே அரசாங்கமும் சம்பளக்கமிஷன் தனது விசாரணையைத்துரிதப்படுத்தி இடைக்கால அறிக்கையை விரைவில் சமர்ப்பிக்கவேண்டுமென வற்புறுத்தி வந்தது. இடைக்கால அறிக்கையின் சிபார்சுகளைச் செயற்படுத்துமுகமாக புதிய வரவு-செலவுத்திட்டத்தில் அவைசேர்க்கப்படுமென்பது நிச்சயம்.

அரசாங்க ஊழியர் பலருக்கும் பலவித கஷ்டங்களும் தொல்லைகளும் இருக்கின்றன. அவர்களின் தேவைகளையும் தொல்லைகளையும் உணர்ந்தும் கடமையாற்றும் ஊழியர்களும் இல்லாமலில்லை சம்பள உயர்வு கிடைப்பதால் அரசாங்க ஊழியர் அனைவரும் தாங்கள் பொதுமக்களின் ஊழியர்கள் என்பதை உணர்ந்தும் அரசாங்கத்துக்கு (எந்தக்கட்சி-ஆட்சியிலிருந்தாலும்) விசுவாசமாக இருந்து அதன் கொள்கைகளையும் திட்டங்களையும் சரிவர அமுல்செய்வார்களென்றும் பொதுமக்கள் எதிர்பார்க்கிருர்கள்.

அரசாங்க ஊழியருக்குச் சம்பள உயர்வு கிடைப்பதையிட்டு யாரும் பொருமை கொள்வதற்கில்லை. வாழ்க்கைச்செலவு உயர்வைச் சமாளிக்கமுடியாமல் திண்டாடும் அவர்களுக்குச் சம்பளஉயர்வு கிடைப்பது பெரும் ஆறுதலளிக்கும். ஆனுல் சம்பள உயர்வு அதிகரிக்க அதிகரிக்க வாழ்க்கைச்செலவும்உயர்ந்து கொண்டுபோமேயன்றிக் குறையமாட்டாது. அரசாங்க ஊழியரின் சம்பளம் மட்டும் உயர்ந்தால் அவர்களுக்குமட்டும்தான் வாழ்க்கைச் செலவு உயர்வு என்பதும் அவர்கள்தான் பாதிக்கப்படுகிருர்கள் என்பதும் அர்த்தமா? அந்நிய செலாவணி உரிமைச்சான்றிதழ் திட்டத்தாலும்அச்சான்றிதழின்விலை சமீபத்தில்உயர்ந்ததாலும் சாதாரண பொதுமக்களேபெரிதும் பாதிக்கப்படவேண்டியிருக்கிறது. உணவு உற்பத்தியை அதிகரிப்பதில் தீவிரமாக ஈடுபட்டு உழைத்த விவசாயிகளுக்கு இன்னும் சரியான உதவி கிடைக்கவில்லை. தனியார் துறையிலுள்ளஊழியர்களும் கைத்தொழில் கடற்றொழிலிலீடுபட்டுள்ளவர்களும் வாழ்க்கைச்செலவுஉயர்வினுல் பெரிதும் பாதிக்கப்படுகிறன்னர். இந்நிலையில் அரசாங்க ஊழியர்களின் சம்பளத்தைமட்டும் அதிகரிப்பதனுல் வாழ்க்கைச் செலவு மேலும் மேலும் உயரவே வழிபிறக்கும். அரசாங்க ஊழியரல்லாத ஊழியருக்கும் கைத்தொழில்,கடற்றொ

# 'நாவலர் செய்த சாதனைகளை தமிழ்நாட்டவர் மறந்துவிடவில்லை'

## தமிழக அறிஞர் ஜனார்த்தனம் பேட்டி

— நமது உடுப்பிட்டி நிருபர் ஜே. ஜெயக்குமார் —

உடுப்பிட்டி, செவ்.

'ஆறுமுகநாவலர் தமிழ் நாட்டில் சைவசமயம் தளர்ந்திருந்த காலத்தில் எதிர்ப்புச் சக்திகளுடன் துணிகரமாகப் போராடிச் சைவசமயத்தை திடும்பவும் லைநாட்டினுர். சைவத்தையும் தமிழையும் நிலைநிறுத்திய பெருமை யாழ்ப்பாணத்து ஆறுமுகநாவலரையே சாரும்.

தாயகத்தில் சைவம் வாழ நாவலர் செய்த சாதனைகளைத் தமிழ்நாட்டவர்கள் மறந்துவிடவில்லை. தமிழகத்தில் நாவலருக்குச்சிலை எழுப்பாதற்கு அரசியலே காரணம்'

இவ்வாறு திருவனந்தபுரம் பல்கலைக்கழகத் தமிழ்த்துறை விரிவுரையாளர் திரு. ஜனார்த்தனம் என்னிடம் கூறினுர்.

திரு. ஜனார்த்தனம் கரவெட்டி தச்சன்தோப்பு விநாயகராலயத்தில் சொற்பொழிவாற்றுவதற்காக இலங்கை வந்துள்ளார். தமிழ், ஹிந்தி, மலையாளம் சமஸ்கிருதம், ஆங்கிலம், பாளி முதலிய மொழிகளில் புலமைபெற்றுள்ள இவருக்கு மதுரை ஆதீனம் பன்மொழிப்புலவர் என்ற பட்டம்வழங்கிக்கௌரவித்தது

எவருடனும் கலகலப்பாகவும் புன்சிரிப்புடனும் பழகும் இவரது ஆடம்பரமற்ற தோற்றம் அனைவரையும் கவரக்கூடியது. கேட்கும் கேள்விகளுக்குத் தெளிவாகவும் விளக்கமாகவும் பதில் சொல்வதோடு நகைச்சுவையும் இயல்பாகவே சேர்ந்து கொள்கின்றது.

'மொழி அமைப்பிலும், மொழித் தூய்மையிலும் யாழ்ப்பாணம எவருக்கும் பின்தங்கியதன்று. ஆனுல் பழையன கழிதலும் புதியன புகுதலும் வழுவல காலவகையால் என்ற நன்னூலாரின் விதிப்படி மொழி வளர்ச்சி இயற்கையில் காலத்திற்கொப்பவே தோன்றுமே தவிரபழையன கழித்தலும்,புதியன புகுத்தலும் செய்ய முற்படுகின்றோமில்லை.

தமிழகத்தவர்களிடமில்லாத தனிச்சிறப்பை யாழ்ப்பாணத்தவர்களிடம் நான் கண்டேன். தமிழ்நாட்டில் ஆம் அல்லது 'யேஸ்' எனவே சொல்வது வழக்கம். இங்கு 'ஓம்' எனச் சொல்வதைக் கேட்டு உள்ளம் பூரித்தேன். ஓம் என்பது சைவத்தின் உயரிய பண்பை, உயரிய தொடர்பைக்காட்டுகின்றது. சமய உண்மைப் பொருளான 'ஓம்' என்பது வேதம் முதல் அறிகின்ற தன்மைவாய்ந்தது. இதனையிட்டு ஈழத்தமிழர்களை நான் பாராட்டுகின்றேன்' என்று கேள்வியொன்றுக்குப் பதிலளிக்கையில் குறிப்பிட்டார்.

கேள்வி: இந்தியாவில் மதக்கல்வி போதிக்கப்படாததற்கு யாதேனும் மூலகாரணம் உண்டா?

### இந்தியாவும் சமயக்கல்வியும்

பதில்: இந்தியா மதச்சார்பற்ற ஒரு நாடு. ஆனுல் இந்திய அரசாங்கம் சமயத்துக்கு எதிரானது அல்ல ஆதலால் அரசாங்கம் இந்தியாவில் சமயங்களை வளர்த்து வருகின்றதேயொழியக் குறிப்பிட்ட எந்தவொரு மதத்தையும் ஆதரிக்கவில்லை.

தமிழகத்தில் இளைஞர்கள் சைவமதத்தில் அதிக ஊக்கம் காட்டி வருகின்றனா. தமிழகத்தில் சமய பாடத்தைக் கட்டாயமாக்க வேண்டிய சூழ்நிலை ஏற்படவில்லை. முன்னுளில் மன்னர்களும் பெரியோர்களும் சைவத்தைக் காப்டார்கள் என்ற நம்பிக்கையும் துணிவும் இருந்தது. இன்று நாமே சைவத்தைக் காட்பாற்ற வேண்டிய சூழ்நிலையில் உள்ளோம். இந்நிலை இலங்கைக்கும் பொருந்தும்.

கேள்வி: தமிழ் இலக்கியத்துறையில் நீங்கள் மேற்கொண்டுள்ள மறுமலர்ச்சியான நடவடிக்கைகள் யாவை?

பதில்: சிலப்பதிகாரம், இராமாயணம், துளசி,வால்மீகி உரைத்தச்சன் முதலிய நூல்களையும் இதர வடமொழிநூல்களையும் ஒப்பு நோக்கிப் பேதங்களை உணர்ந்து தமிழகமெங்கும் சொற்பொழிவுகள் மூலம் இவற்றைப் பரப்பி வருகின்றேன் சமய நூல்களை ஆராய்ந்து இலக்கியச்சுவையோடு மக்கள் மத்தியில் பிரசாரம் செய்து வருகின்றேன்.

### கலைச்சொல்லாக்கம்

கேள்வி: தமிழில் மொழி பெயர்க்கப்படும் விஞ்ஞான வர்த்தக நூல்களில் காணப்படும் கலைச்சொற்கள் இரு நாடுகளிலும் வெவ்வேறு விதமாகக் குறிக்கப்பட்டுள்ளன. இதனுல் ஈழத்துமாணவர்கள் இந்திய நூல்களை படிக்க முடியாமலுள்ளது. இரு நாட்டுக்கும் பொதுவாகக் கலைச்சொல்லாக்கம் செய்யமுடியாதா?

பதில்: ஏன் முடியாது ஒரே கலைச்சொல்லாக்கம் கட்டாயம் செய்யப்பட வேண்டியது அவசியமாகும். இதனை அரசாங்கமே செய்ய வேண்டும். சட்டரீதியான கலைச்சொல்லாக்கம் செய்வதின் மூலம் தமிழர் வாழுமிடமெங்கும் ஒரே கலைச்சொல்லை உபயோகிக்கலாம்

கேள்வி: தமிழ் இலக்கணத்தில் வேற்றுமைகள்வட மொழியிலிருந்தே தோன்

ஒன்றுஅமைந்தாலே சைவம் எங்கும்வியாபித்துவளரும்.

### கேரளத்து உணர்வு இங்கு

கேள்வி: இலங்கையைப் பற்றிய உங்கள் பொதுவான அபிப்பிராயம்?


பதில்: எனது ஊரான கேரள சூழ்நிலைக்கும் இலங்கையின் சூழ்நிலைக்கும் ஒற்றுமை உண்டு. காலநிலையும் ஒரேமாதிரியானதே அழகும் எழிலும் கொஞ்சும் ஈழத்தில் கேரளத்தில் இருப்பதுபோன்றே எண்ணிக்கொள்ளுகின்றேன். விருந்தோம்பலிலும், அன்பிலும் ஈழத்தவர்களை எவரும் வெற்றிபெற முடியாது.

——

## காணவில்லை என புகார்

உருத்திரபுரம்,செவ்.

உருத்திரபுரத்தில் தங்களுடன் வசித்து வந்த காரை நகரைச் சேர்ந்த ஆறுமுகம் கனகசபாபதி என்பவரைக் காணவில்லையென்றும் சிலர் அவரைக் கடத்திச் சென்றிருக்கலாமெனத் தாங்கள் அஞ்சுவதாகவும் உருத்திரபுரத்தைச் சேர்ந்த ஒரு தாயும் மகளும் பொலிஸில் புகார் செய்துள்ளனர்.



# "சமுதாயப்பார்வையற்ற சிருஷ்டி இலக்கியமாகாது'

கண்டி, செவ்வாய்

எழுத்தாளன் என்பவன் விண்ணிலிருந்தோ, வேறு புதியஉலகிலிருந்தோகுதிப்பவனில்லை. அவன் தான் வாழுகின்ற மக்கள் மத்தியிலேயே தோன்றுகின்றுன். அத்தகைய மக்களுடன் இரண்டறப் பழகி, அந்த மக்களின் குரலையும், உணர்வுகளையும், தனது எழுத்துக்களில் வடிக்கின்றுன் அவனுக்குத் தான் வாழும் வாழ்க்கை நிகழ்ச்சிகளிலிருந்தும் மக்களிடமிருந்தும் இலக்கியக் கருவூலங்கள் கிடைக்கின்றன.

கண்டியில நடந்த இலக்கிய கலந்துரையாடலில் கலந்துகொண்டு பேசுகையில எழுத்தாளர் திரு. எஸ் அகஸ்தியர் மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

அவர் தொடர்ந்து பேசுகையில கூறியதாவது:-

எழுத்தாளனுக்கு ஓர் ஆழமான சமுதாயப்பார்வை நிச்சயமாக இருக்கவேண்டும். சமுதாயப் பார்வையற்ற எழுத்தாளனுல ஒரு சிறந்த சிருஷ்டி இலக்கியத்தை எஞ்ஞான்றும் படைத்துவிடமுடியாது. ஏனென்றுல் எழுத்தாளன் தான் வாழுகின்ற மக்களுடன் நன்கு பழகி இருந்தாலன்றி அந்த மக்களின் உணர்ச்சிகளைத் தன் சிருஷ்டி இலக்கியத்தில் தத்ரூபமாகவோ, யதார்த்தமாகவோ, முறையாகவோ படைத்துக் காட்டமுடியாது.

யதார்த்த இலக்கியமும் மக்கள் இலக்கியமுமே முற்போக்குத் தன்மையுள்ள கலையம்சம் பொருந்திய உண்மையான மானிட சிருஷ்டி இலக்கியமாகும். சமுதாயப் பார்வையற்ற சிருஷ்டி மக்கள் இலக்கியமா முடியாது.

——

## உண்ணுவிரதம் கைவிடப்பட்டது

ஹைதராபாத் ஜுலை 1

சர்வோதய தலைவர்களில் ஒருவரான சுவாமி ராமானந்த தீர்த்தர் தமது நான்கு நாள் உண்ணு விரதத்தை இன்று கைவிட்டார். தெலிங்கானு கிளர்ச்சியில் வன்முறைச் செயல்கள் இனியும் ஏற்படாமல் பார்த்துக் கொள்வதாக பல்வேறு அரசியல் கட்சித் தலைவர்களும் வாக்குறுதியளித்ததைத் தொடர்ந்து அவர் தமது உண்ணுவிரதத்தைக் கைவிட்டார்.

விற்பனைக்கு

பலாலிரோட்பரமேஸ்வரா கல்லூரிச் சந்தியில் '2 பரப்புக் காணியும் கட்டிடமும்' உடனடியாக விற்பனைக்கு உண்டு. விபரங்கட்கு 463 காங்கேசன் துறைரோட், யாழ்ப்பாணம். 1221

# நாவலனுர் நற்புகழே பாடுதுங்காண் அம்மானை

— பண்டிதர் க. மயில்வாகனன் —

அம்மானைவரி

பல்லூழி செந்தமிழ்த்தாய் பாரிற் பயில்தவத்தால்
நல்லூரில் வந்துதித்தார் நாவலனுர் அம்மானை
நல்லூரில் வந்துதித்தார் நாவலனுர் இல்லையெனில்
நல்லதமிழ்ச் செல்வமிந்த நாட்டிலுண்டோ அம்மானை
நாவலனுர் நற்புகழே பாடுதுங்காண் அம்மானை.

தண்ணுர் தமிழ்மரபு தாரணியில் மாய்கையிலே
என்னுர் தமிழ்ப்புலவர் இங்கிருந்தார் அம்மானை
என்னுர் தமிழ்ப்புலவர் இங்கிருப்ப நம்மையன்
நண்ணி உயர்மரபு நாட்டினரால் அம்மானை
நல்லோன் புகழ்பரவிப் பாடுதுங்காண் அம்மானை.

ஞானப் பிரகாசன் நன்மரபில் நாவலனுர்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

முகமாக புதிய வரவு-செலவுத்திட்டத்தில் அவைசேர்க்கப்படுமென்பது நிச்சயம்.

அரசாங்க ஊழியர் பலருக்கும் பலவித கஷ்டங்களும் தொல்லைகளும் இருக்கின்றன. இவற்றினுல்தான் சில ஊழியர் தங்கள் கடமையையும் பொறுப்பையும் சரிவரச் செய்யமுடியாமல் பொதுமக்களிடமும் அரசாங்கத்திடமும் குறைகேட்க நேரிடுகிறது. எத்துனை கஷ்டங்களுக்கிடையிலும் அரசாங்கத்துக்கு விசுவாசமாகவும் பொதுமக்கயர்களின் சம்பளத்தைமட்டும் அதிகரிப்பதனுல் வாழ்க்கைச் செலவு மேலும் மேலும் உயரவே வழிபிறக்கும். அரசாங்க ஊழியரல்லாத ஊழியருக்கும் கைத்தொழில், கடற்றொழிலிலும் விவசாயத்திலீடுபட்டுள்ளவர்களுக்கும் வாழ்க்கைச்செலவு உயர்வுதாக்காத முறையில் அரசாங்கம் ஏதாவது செய்தாகவேண்டும் அரசாங்க ஊழியர்களைத் திருப்திப்படுத்தத்தான் வேண்டும். அதற்காக மற்றவர்களின் அதிருப்தியைத் தேடவேண்டுமா?

## ஷோம்பேயின் கதி

''வினை விதைத்தவன் வினை அறுப்பான்; தினை விதைத்தவன் தினை அறுப்பான்'' என்பது முதுமொழி. இது கொங்கோவின் முன்னுள் பிரதமர் மொயிஸி ஷோம்பேயின் விஷயத்தில் சரியாகவே இருக்கிறதென்று சொல்லலாம்.

கொங்கோ நாடு பெல்ஜியத்தின் பிடியிலிருந்து விடுதலை பெற்றதும் கடாங்காமாகாணத்தைத் தனியாகப்பிரித்து 'தனிக்காட்டு ராஜா'வான ஷோம்பே அந்நியரின் உதவியுடன் கொங்கோவின் மத்திய அரசாங்கத்துக்கும் தலைவர்களுக்கும் மட்டுமல்லாது மக்களுக்கும் பெருந் தொல்லைகளை ஏற்படுத்தக் காரணமாக இருந்தார். கொங்கோவின் விடுதலைக்காக உழைத்த திரு. பட்ரிஸ் லுமும்பாவின் கொலைக்கு அவர் உடந்தையாக இருந்தார். கொங்கோவின் அமைதியே குலைந்து தங்களைத் தாங்களே ஆளத்தெரியாதவர்களுக்குச் சுதந்திரம் என்ன வேண்டிக் கிடக்கிறது என்று அந்நியர் நையாண்டி செய்யுமளவுக்கு கொங்கோவில் சம்பவங்கள் நிகழ்வதற்கு ஷோம்பே காரணகர்த்தாவாகவிருந்தார். அவரைப் பிறர் பயன்படுத்திக் கொள்ளக்கூடியதாக அவர் நடந்தார்.

இதன் விளைவாக அவர் தமது சொந்த நாட்டில் வாழ முடியாமல்போனதுமல்லாமல் 'தேசத்துரோகி' என்ற பெயரும் பெற்று அல்ஜீரியாவில் சிறையிருந்து அங்கேயே யாருமற்ற அனுதையாக காலமாகியிருக்கிருர்.

ஒருவர் எப்படிப்பட்டவராக இருப்பினும் அவர் இறந்த பின்னர் அவரைப்பற்றி நல்லது சொல்வதே முறை. ஆனுலும் ஷோம்பே போன்றவர்களின் முடிவு, சுதந்திரம் கிடைத்துவிட்டதும் தம்மை மறந்து துள்ளிக் குதிப்போருக்கும் மக்கள் ஆதரவளித்து விட்டால் தம்மைவிட வேறு தலைவன் இல்லையென்று அரசியல் வெறி பிடித்தலைவோருக்கும் அவர்கள் எந்நாட்டவராயிருப்பினும் அவர்களுக்கு ஒரு படிப்பினையாக இருக்க வேண்டும். ஆயினும் ஷோம்பேயின் கதி அவரது பகைவனுக்குக்கூட இனி ஏற்படாதிருக்க வேண்டும்.

## தேவை

**யாழ் மாநகரசபை எல்லைக்குள் பத்திரிகை விநியோகம் செய்வதற்கு சயிக்கிள் உள்ள பையன்கள் தேவை. நேரில் வரவும். விநியோக மனேஜர், 'ஈழநாடு' யாழ்ப்பாணம்.**

இப்பத்திரிகை ஈழநாடு லிமிட்டெட் ஸ்தாபனத்தாரால் யாழ்ப்பாணம் சிவன்கோவில் மேலை வீதி 63ப இலக்கத்திலுள்ள அவர்களது அச்சகத்தில் 1969ம் ஆண்டு ஜூலை மாதம் 2-ம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது



# இராமநாதன் இசைக்கழக விழாவில் இன்று இன்னிசை

இசைப்பேரரசி சேலம் எஸ். ஜெயலட்சுமி இன்று மாலை 7 மணிக்கு இராமநாதன் இசைக்கல்லூரியில் ஆரம்பமாகும் ஸ்ரீ தியாகராஜசுவாமிகளின் உற்சவத்தில் இசைவிருந்தளிக்கிருர். செல்வி ஜெயலட்சுமி நேற்றிரவு யாழ்ப்பாணம் திறந்த வெளியரங்கிலமைந்துள்ள அலங்காரப்பந்தலில் நடைபெற்ற நாவலர் மகாநாட்டு கலை நிகழ்ச்சிகளில் கலந்து கொண்டு ஆயிரக்கணக்கான மக்களைத் தனது இன்னிசையால் மகிழ்வித்தார்.

செல்வி ஜெயலக்ஷமி நூற்றுக்கணக்கான கச்சேரிகள் செய்துவந்துள்ளார். பிரபல தேவாலயங்களின் பிரம்மோற்சவ இசையரங்குகளிலும், சங்கீத சபைகளிலும் உன்னதமான பக்கவாத்தியங்களுடன் இவர் நிகழ்த்தும் சம்பிரதாயமான கச்சேரிகள் பல்லாயிரக்கணக்கான மக்களின் உள்ளங்களை நிரப்பி அவர்களைப் பக்திப் பரவசத்தில் திளைக்கச் செய்வன. சென்னையில் மியூஸிக் அகடெமி, இந்திய நுண்கலைக் கழகம், தமிழிசைச் சங்கம் இவற்றில் அநேக ஆண்டுகள் ஜெயலக்ஷமி முக்கியகச்சேரிகள் செய்துவருகிருர்.

சித்திரப் பாவைபோல் அழகுற அமர்ந்து கீதமினிய குயில்போன்ற குரலில், இலயஞானம், சுருதிஞானம் ஒளிவீச, சபா ரஞ்சிதமாகப் பாடல்களை நிர்ணயித்து விறுவிறுப்புடன் பாடும் இவரது பாணி, இசையுலகில் இவருக்கு 'இசைப்பேரரசி' என்ற சிறப்புப்பட்டப் பெயரையே அளித்துள்ளது

தித்திக்கும் தீந்தமிழில் எத்திக்கும் தமிழோடிசை பாடல்செய்யும் ஜெயலக்ஷமி 20-ம் வயதிலேயே சேலத்தில் சாரதாமணிதேவி மகளிர் கல்வி நிலையம் நிறுவி அதற்கான நிலமும் வழங்கி அதன் செயலாளராகவும் பணி புரிந்தார். சமூகநலப் பணித்துறையில் ஜில்லா கௌரவ அமைப்பாளராக இருந்து சேவைசெய்துள்ளார். அண்மையில் சென்னையில் இந்தியப் பண்பாட்டுக் கழகம் நிறுவிஅதன் செயலாளராக ரசிகப் பெருமக்களின் பயன்கருதிச் சிறந்த கச்சேரிகள் செய்விக்கிருர்.

சிறந்த மொழிபெயர்ப்பாளரான ஜெயலக்ஷ்மி சுவாமி விவேகானந்தரின் ஐரோப்பிய பயணம்பற்றிய நினைவுக் குறிப்புகளைத் தமிழில் மொழிபெயர்த்து விவேகானந்தர் நூற்ருண்டு வெளியீட்டு எட்டாவது நூலில் வெளியிடுவித்ததோடு பிரபல நாவலாசிரியை பேள்பக் (Pearl Pouck), உலகமேதை டாக்டர் எஸ். ராதாகிருஷ்ணன் ஆகியோரது நூல்களையும் தமிழில் மொழிபெயர்த்து வருகிருர்.

இசையாளர் மொழிபெயர்ப்பாளர் மட்டுமன்றி ஜெயலக்ஷ்மி சிறந்த எழுத்தாளராகவும் பேச்சாளராகவும் விளங்குகிருர். 'பக்திவனம்' 'தோழரும் தோழர் தம்பிரானும்' என்ற இரு அழகிய நூல்களைச் சமீபத்தில் வெளியிட்டுள்ளார்.

இந்திய கலாச்சாரம், தமிழ்மொழியின் தனித்தன்மை, சமஸ்கிருத்தின் கவின்பெறுவனப்பு, அன்ருட வாழ்வில் எளிமை, தூய்மை ஒழுங்குமுறை, சாத்வீகச் சைவ உணவு, அமைதி, தெய்வநம்பிக்கை, தளராஊக்கம் இவையே ஜெயலக்ஷமியின் இறைகளோடிசைந்த இன்ப வாழ்வாகும்.

கலைச்சொல்லாக்கம் செய்வதின் மூலம் தமிழர் வாழுமிடமெங்கும் ஒரே கலைச்சொல்லை உபயோகிக்கலாம்

கேள்வி: தமிழ் இலக்கணத்தில் வேற்றுமைகள்வடமொழியிலிருந்தே தோன்றினவென்றும் சில வேற்றுமை உருபுகளிடையே அதிக ஒற்றுமை காணப்படுவதால் வேற்றுமை தமிழ் இலக்கணத்திற்கு அவசியமற்றதென்றும் கூறுவது சரியா?

பதில்: பெயர்ச் சொல்லின் பொருளை வேறுபடுத்துவதே வேற்றுமை. வேற்றுமை எல்லா மொழிகளுக்கும் பொருந்தும். வடமொழியிலிருந்துவேற்றுமை தமிழிலக்கணத்தில் புகுந்து கொண்டது எனக் கூறுவது அர்த்தமற்றது.

இந்திய மொழிகள் அனைத்தும் 'அ''கர ஒலியுடனே தோன்றுகின்றன. இலங்கையிலும் சிங்கள மொழி ''அ'' வுடனே ஆரம்பமாகின்றது. இவற்றிலும் உருபு உண்டு. சந்தர்ப்பத்திற்கேற்ப பொருள் வேறுபடும். இராம் கோ தோ (இராமனுக்குக் கொடு) என்பதில் 'கோ' என்பது 4-ம் வேற்றுமை உருபை ஏற்கின்றது. இராம் கோபுலாவோ (இராமனைக் கூப்பிடு) என்பதில் ஐ இரண்டாம் வேற்றுமை உருபும், கு நான்காம் வேற்றுமை உருபும் ஏற்கின்றது. இடமறிந்து பொருள் வேறுபடுவதை இதில் காணலாம்.

## இளமையில் பற்று ஏற்படவேண்டும்

கேள்வி: சமயத்தை எவ்விதம் பரப்பி மதப் பற்றை வளர்க்க முடியும்?

பதில்: இளமையிலேயே சமயத்தில் பற்றை ஏற்படுத்திவிடவேண்டும். ஆயிரம் சமய நூல்களைக் கற்பதை விடப் பெற்ருேரின் நடவடிக்கை, வாழ்க்கை முறை, ஆசாரத்தாலும் மக்கள் மனத்தில் சமய உணர்ச்சியை வேரூன்ற வைக்க முடியும்.

நூல், சொற்பொழிவுகள் வளமாக அமைந்துவிளங்கச் செய்வதின் மூலம் மத வளர்ச்சிக்கு இடமுண்டு. விளக்கம் பயனற்றுப் போனுல் புத்தகங்களும் சொற்பொழிவுகளும் பயன்படாது போய்விடும். தன்னலமின்றித் தொண்டாற்றும் தொண்டர்கள் ஊருக்கு ஒருவராக இருந்தால் சமயம் மேம்படும்.

பிறமதங்களுக்கு உள்ளது போல் இந்து மதத்துக்கும் உலகரீதியான ஸ்தாபனம்

என்னூர் தமிழ்ப்புலவர் இங்கிருந்தார் அம்மானை
என்னூர் தமிழ்ப்புலவர் இங்கிருப்ப நம்மையன்
நண்ணி உயர்மரபு நாட்டினரால் அம்மானை
நல்லோன் புகழ்பரவிப் பாடுதுங்காண் அம்மானை.

ஞானப் பிரகாசன் நன்மரபில் நாவலனுர்
வானத் திளங்கதிராய் வந்துதித்தார் அம்மானை
வானத் திளங்கதிராய் வந்துதித்தார் இல்லையெனில்
ஆனேறு மெந்தைநெறி ஆரறிவார் அம்மானை
ஆறுமுகன் சீர்பரவிப் பாடுதுங்காண் அம்மானை.

ஆரணமும் ஆகமமும் அன்றுரைத்த வாழ்வுநெறி
தாரணியோர் தாம்மறந்து தாழ்வுற்ருர் அம்மானை
தாரணியோர் தாம்மறந்து தாழ்வுற்ற வேளைதனில்
ஏருலவு தண்மதியாய் இங்கெழுந்தார் அம்மானை
ஏந்தல் புகழ்பாடி ஏத்துதுங்காண் அம்மானை.

நாட்டில் மறுமலர்ச்சி நண்ணியநல் வேளைதனில்
பாட்டில் நடம்பயின்ருள் பைந்தமிழ்த்தாய் அம்மானை
பாட்டில் நடம்பயின்ருள் பைந்தமிழ்த்தாய் நல்வசன
ஏட்டில் வலம்வரவே இங்குழைத்தார் அம்மானை
எந்தை புகழ்பரவி ஏத்துதுங்காண் அம்மானை.

சைவமெனுஞ் செஞ்சாலி தாரணியில் வாடுகையில்
பெய்யுமுகில் ஆகிநின்ற பெட்பினரார் அம்மானை
பெய்யுமுகில் ஆகிநின்ற பெட்பினர்தாம் இல்லையெனில்
வையமிதிற் சொற்பொழிவு மார்க்கமுண்டோ அம்மானை
வள்ளல் புகழ்பரவி வாழ்த்துதுங்காண் அம்மானை.

சங்கத் தமிழோடு சைவநெறி காத்தோம்பத்
துங்கமுறு சந்தானந் தோற்றுவித்தார் அம்மானை
துங்கமுறு சந்நானந் தோற்றுவித்தார் இல்லையெனில்
பங்கமில்சீர் யாழ்நாட்டைப் பாரறியா தம்மானை
பண்பாளன் பேர்பரவிப் பாடுதுங்காண் அம்மானை.

செந்தமிழைச் சைவத்தைத் தேராடும் வீறெய்திச்
சிந்தைகொளப் பேருரைதான் செய்தவரார் அம்மானை
சிந்தைகொளப் பேருரைதான் செய்தனராம் இல்லையெனில்
பைந்தமிழ்நூல் மாண்பிந்தப் பாரறியா தம்மானை
பார்புகழும் நாவலன்சீர் பாடுதுங்காண் அம்மானை.

ஈழத் தமிழினத்தார் இன்றுவிழிப் பெய்திநின்ருர்
ஏழைத் தனந்தடிந்தே ஏற்றமுற்ருர் அம்மானை
ஏழத் தனந்தடிந்தே ஏற்றமுற்ருர் நாவலனுர்
வாழைச் சிலைசமைத்தார் வாழியிவர் அம்மானை
வல்லோன் அடிபரவி வாழ்த்துதுங்காண் அம்மானை.

★ ★ ★

# நாவலர் பாடல்

சீரேறு கருணையுரு வாயவிசுவேசரனொடு திகழ் விசாலாட்சி தந்த
செல்வமே யடியவர்களினிதுண்ணவுண்ணத் தெவிட்டாத தெள்ளமுதமே
பேரேறு மறிவிச்சை தொழிலென்று மதமூன்று பெருகுமானந்தவடிவே
பிரணவப் பொருளே யென்னுறவே யென்னுள்ளமே பேசுமிரு கண்ணின் மணியே
காரேறு நெடுமா லொடயன் முதலியாவருங் காணரிய நினதிரண்டு
கழல் பணிந்திடின் மகப்பேறுமுத லியாவையுங் கைகூட்டலரிதாகுமோ
வாரேறு களப பரிமளமருபு முபயமுலை வலவையுளமகிழ் கொழுநனே
மண்டுமது வுண்டுலவு தண்டலை யராலி நகர்வாழ் சித்திவேழமுகனே.

இப்பாடலும் வேறு இரு விருத்தப்பாக்களும் 1856-ம் ஆண்டு சித்திரைமாதம் ஸ்ரீலஸ்ரீ ஆறுமுகநாவலர் அராலி மேற்கு ஸ்ரீவிசாலாட்சி சமேதவிஸ்வநாதேஸ்வரர் ஆலயத்திற்கு வருகை தந்து பாடியதாகவும் பின்னுல் அப்பாக்களிலிரண்டு ஆலய மகாமண்டபச் சுவரில் எழுதப்பட்டதாகவும் அவை இன்றுவரை வருடாவருடம் மைதீட்டப்பெற்று வருவதாகவும் ஆலயபூஜகர் கூறுகிருர்.

— வே. வி. மூர்த்தி.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org